# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 06 வியாழக்கிழமை (19-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily இதழ்:144



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்


## காயமடைந்த செய்தியாளர் கண் பார்வை இழக்கும் ஆபத்து



கொழும்பு,ஏப்.19

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று திரும்பிய வழியில் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த லண்டன் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் செய்தியாளர் மேரி கத்தரின் கொல்வினுக்கு கொழும்பில் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது கண் பார்வையைப் பாதுகாப்பதற்காக டாக்டர்கள் போராடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுச் சிதறல்களால் அவரது இடது கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டிருப்பதால் அவர் பார்வை இழந்திருக்கலாம் என்று டாக்டர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். கண்ணில் ஏற்பட்ட காயத்துக்கு நேற்று முன்தினம் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

மேலதிக சிகிச்சைக்காக அடுத்த சில தினங்களில் அவர் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட இருப்பதாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'லண்டன் ரெலிகிறாப்' தகவல் வெளியிட்டிருக்கிறது. (ஐ)

## துப்பாக்கிப் பிரயோகத்துக்கு முன் கத்தரின் மீது கிரனேட் வீச்சு!

லண்டன்,ஏப்.19

துப்பாக்கிச் சூட்டுக்கு முன்பாக செய்தியாளர் மேரி கத்தரினை நோக்கி கிரனேட் வீசப்பட்டதாகவும் அது வெடித்த போதே அவர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

பொதுமக்களுடன் செய்தியாளர் கத்தரின் நடந்து சென்று கொண்டிருந்த சமயம் அவருக்கு அருகே கிரனேட் ஒன்று வெடித்ததாகவும் அதனைத் தொடர்ந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் லண்டன் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் வெளிநாட்டுச் செய்திப் பிரிவின் ஆசிரியர் சியன் றயன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் செல்ல செய்தியாளர் கொல்வின் அரசிடம் முன் அனுமதி பெற்றிருந்தாரா என்பது குறித்து றயன் கருத்து எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டார் என்று 'லண்டன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் மீதான தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்

லண்டன்,ஏப்.19

லண்டன் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் செய்தியாளர் மேரி கத்தரின் கொல்வின் (வயது44) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த சம்பவத்தை விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

வன்னியில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் இது தொடர்பாக நேற்று கண்டன அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உண்மையை மறைத்து பொய்மையை ஆயுதமாகக் கொண்டு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், பெரும் கருத்துப் போரை நடத்தியவாறு அபபட்டமான இன அழிப்புப் போரை இலங்கை அரசு நடத்தி வருகின்றது. இந்த நிலையில் உண்மையை உலகறியச் செய்ய முயன்ற வெளிநாட்டுச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சு முயற்சிகளில் இந்தியாவின் பங்களிப்பை ஐ.தே.க. வலியுறுத்துகிறது

### சொல்ஹெய்மிடம் வேண்டுகோள்

கொழும்பு,ஏப்ரல்19

**இலங்கையின் இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் முயற்சியில் இந்தியாவின் நேரடிப் பங்களிப்பையும் பெறவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நோர்வேத் தலைவர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.**

**விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் பேசிய போதும், இந்தியாவின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு ரணில் வேண்டுகோள் விடுத்தார்.**

எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் நோர்வே விஜயம் குறித்து கட்சி நேற்றுக் கொழும்பில் வெளியிட்ட அறிக்கையில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சி குறித்து, அதன் முன்னேற்றம் அல்லது பின்னடைவு குறித்து இந்தியாவுக்குத் தவறாது அறிவிக்கவேண்டும். அதேவேளை இந்த விடயத்தில் அதன் நேரடிப் பங்களிப்பும் அவசியம்"

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கு ஒத்துழைப்புத் தர அரசுக்கு ரணில் நிபந்தனை

ஒஸ்லோ,ஏப்.19

இலங்கையில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக கட்சி முன்வைத்துள்ள நான்கு சுதந்திர ஆணைக் குழுக்களை அமைக்கும் கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்த வருக்கும் சமாதானப் பேச்சுக்களுககு ஒத்துழைப்பு வழங்குவதை ஐ.தே.க. மறுபரிசீலனை செய்யும்.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு அரசுக்கு நிபந்தனை விதித்திருக்கிறார்.

ஒஸ்லோ சென்றுள்ள ரணில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் படையினர் உஷார்

மட்டக்களப்பு,ஏப்.19

அன்னை பூபதியின் பதின்மூன்றாவது நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நேற்று படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டிருந்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

மேலதிக படையினர் வரவழைக்கப்பட்டு மட்டுநகரின் முக்கிய சந்திகளில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

முக்கிய இடங்களில் புதிதாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் பாலசிங்கத்தைச் சந்திப்பார்

லண்டன், ஏப்.19

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்னும் சில தினங்களில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசுவார் என்று லண்டன் தகவல்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் இந்தச் சந்திப்பு இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் 24ஆம் திகதியுடன் காலாவதியாகும் யுத்தநிறுத்தத்தை நீடிக்குமாறு சொல்ஹெய்ம் பாலசிங்கத்திடம் கேட்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## விமானத்துக்கான எரிபொருளை புலிகள் வன்னிக்குக் கடத்தினரா?

### பாதுகாப்பு வட்டாரங்களில் சந்தேகம்

கொழும்பு,ஏப்.19

விமானங்களை இயக்குவதற்குப் பயன்படுத்தப்படும் எரிபற்று நிலை கூடிய உயர்ரக எரிபொருளை விடுதலைப் புலிகள் வன்னிக்குக கடத்தி வந்துள்ளனரா?

பாதுகாப்பு வட்டாரங்களில் இத்தகைய சந்தேகம் எழுந்துள்ளதாக இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவின் சி.என்.என். தொலைக்காட்சியில் நேற்று ஒளிபரப்பான கேள்வி - பதில் நிகழ்ச்சி ஒன்றில் இக்பால் அத்தாஸுடனான தொலைபேசிப் பேட்டி இடம்பெற்றது. அந்தப் பேட்டியிலேயே அவர் இத் தகவலை வெளியிட்டார்.

முல்லைத்தீவு சாலைக் கடற்பரப்பில் கடந்த ஞாயிறு அதிகாலை கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையே கடும் சமர் நடைபெற்றது தெரிந்ததே.

இந்தச் சமரின் பின்னர் அந்தக் கடற்பிரதேசத்தில் மிதக்கக் காணப்பட்ட பல பிளாஸ்ரிக் பரல்களைக் கடற்படையினர் மீட்டுள்ளதாகவும்-

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களின் செய்திகளை பரிமாற செஞ்சிலுவை வசதி

கொழும்பு,ஏப்.19

பொதுமக்களின் அவசர செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்கென செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு புதிய சேவை ஒன்றை உருவாக்கியுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

வழமையான தபால், தந்திசேவைகள் கிடைக்கப்பெறாத மக்களின் அவசர செய்திகளைப் பரிமாறும் நோக்கத்துடனேயே இந்தப் புதிய சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சேவையை ஆரம்பிக்கும் வகையில், போர் நடைபெறும் பிரதேசத்தில் உள்ள செஞ்சிலுவைச சர்வதேசக் குழுவின் அலுவலகங்

(12ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் வல்லுறவுச் சம்பவம்

## விசாரணையை கொழும்புக்கு மாற்றுவதற்கு அனுமதி மறுப்பு

கொழும்பு,ஏப்.19

மன்னாரில் கைது செய்யப்பட்ட இரு பெண்கள் வல்லுறவு மற்றும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டது தொடர்பான விசாரணைகளை கொழும்பு அல்லது அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரான பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

மன்னார் நீதிமன்றில் விசாரணைகள் நடைபெறும் போது, போக்குவரத்துச் சிக்கல்கள் காரணமாக அதில் பங்குபற்றுவதில் தனது சட்டத்தரணி

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் உடன் நிறுத்தப்பட்டு பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும்

### சமாதானப் பேரவையினரிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.19

தொடரும் யுத்தத்தை அரசு உடனடியாக நிறுத்தி ஆக்கபூர்வமான சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் வந்துள்ள தேசிய சமாதானப் பேரவைக் குழுவினர் மற்றும் தென்பகுதிப் பத்திரிகையாளர்கள் ஆகியோரிடம் யாழ். மக்களின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இவர்கள், நேற்று குடாநாட்டின் மூத்த பிரஜைகள் மற்றும் யாழ். சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள், யாழ்.வணிகர் கழக நிர்வாகிகள் போன்றோரைச் சந்தித்து யாழ்.மாவட்ட நிலைவரம் பற்றிக் கேட்டறிந்து கொண்டனர்.

மக்கள் சமாதானத்தையே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள யுத்தநிறுத்தத்தை ஏற்றுக் கொண்டு அரசும் யுத்தநிறுத்த அறிவிப்பை வெளியிடவேண்டும்.

யுத்தம் மூலம் ஒருபோதும் நாட்

(12ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

We Serve

# வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு

*இடம் :-* சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலையம், புலோலி மேற்கு.

*காலம்:-* 21.04.2001 சனிக்கிழமை மு.ப 10.00 மணி

**கண்ணாடிகளை வழங்கி நிகழ்வைச் சிறப்பிப்போர்:**

1. லயன் க.தணிகாசலம் அவர்கள்
   *முன்னாள் பிராந்திய தலைவர்,*
   *கணக்காளர் - யாழ்மாவட்ட செயலகம்.*
2. லயன் ஆ.சிவசுவாமி அவர்கள்
   *மாவட்ட தலைவர்,*
   *பிரதேச செயலர் - பருத்தித்துறை.*
3. லயன் ஆ.பசுபதி அவர்கள்
   *முன்னாள் தலைவர் - வடமராட்சி லயன்ஸ் கழகம்,*
   *உதவி தொழில் ஆணையாளர், திருகோணமலை.*

கடந்த 4.3.2001 இல் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் அணிவதற்கு சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படும். உரியவர்கள் குறித்த நேரத்தில் வருகை தந்து கண்ணாடிகளைப் பெற்றுச்செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(C/16361)

உ

# வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி
# பவள விழா

முதலாம் நாள் நிகழ்வுகள்
எம்.எஸ். இராசரத்தினம் அரங்கு
நாளை (20.04.2001) வெள்ளிக்கிழமை பி.ப 2..30 மணி

*தலைவர் :-* திரு.ந.சபாரத்னசிங்கி அவர்கள்
*(தலைவர், பழைய மாணவர் சங்கம்)*
*பிரதம விருந்தினர் :-* திரு.வி.இராசையா அவர்கள்
*(வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்.)*
*சிறப்பு விருந்தினர் :-* கலாநிதி க.குணராசா அவர்கள்
*(பிரதேச செயலர், சங்கானை)*
*அருளாசியுரை:-* ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
*(முதல்வர், நல்லை ஆதீனம்.)*
*வாழ்த்துரைகள் :-* Maven Brennes wik *(Program Manager Forut)*
திரு.கே.வரப்பிரதன், *(தலைவர், வட்டு. இந்து வாலிபர் சங்கம்)*
*சிறப்புச் சொற்பொழிவு:-* "மனித மேம்பாடும் ஆத்மீகமும்"
*நிகழ்த்துபவர்:-* பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள்

பவள விழா மலர் வெளியீடு:-
*வெளியீட்டுரை:-* கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்
*(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*
*ஆய்வுரை:-* திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்
*(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)*
*பவளவிழாச் சிறப்புக் கௌரவம்*
*பெறுபவர்:-* சைவமணி சி.மருதபிள்ளை அவர்கள்
*(இளைப்பாறிய உப அதிபர்)*
*பவளவிழாப் பரிசளிப்பு*
மாணவர் கலை நிகழ்ச்சிகள்
*சிறப்பு நிகழ்ச்சி* - கவியரங்கம்
"அக்கரைகள் பச்சையில்லை"
*தலைவர்:-* கவிஞர் சோ.பத்மநாதன்
*பங்கேற்போர்:-*
கவிஞர் த.ஜெயசீலன் கவிஞர் காரை.எம்.பி.அருளானந்தன்
கவிஞர் ச.முகுந்தன் கவிஞர் நா.சிவசிதம்பரம்

அனைவரும் வருக.

*- வட்டு.மத்திய கல்லூரி. பவளவிழாச் சபை.*

*விழா சிறக்க வாழ்த்துவோர்:*
**இ.ச.பேரம்பலம் சகா நிறுவனம்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**
41, பெரியகடை யாழ்ப்பாணம். (86813)

# ஆண்டு 5 புலமைப் பரிசில்
## 2001 - 2002
## அம்பிகைபாகனின்

முற்றிலும் புத்தம் புதிய வழிகாட்டி நூல்
விலை ரூபா 240/=

**பரணி கொம்யூனிக்கேசன்ஸ்**
*138, இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம்.*
தொலைபேசி : 2365
**(ஸ்ரீ லங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் கிடைக்கும்)**
(86817)

**லஷ்சுமி இணுவில்**
பிரசாந்த், சிம்ரன், கரண்
நடிப்பில்
**கண்ணெதிரே தோன்றினாள்**
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

**நாகம்ஸ் சுன்னாகம்**
விஜய், சிம்ரன், விவேக்
நடித்த
**ப்ரியமானவளே**
(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்)
(86837)

**ராஜா யாழ்ப்பாணம்**
கார்த்திக், லைலா
மற்றும் பலர் நடிப்பில்
**ரோஜாவனம்**
காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)
(C/16329)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை தவவிநாயகம் (J.P)

(குமார் சொப் நிறுவனத்தாரின் தந்தையார்-
அல்லைப்பிட்டி முன்னாள் கிராமத் தலைமைக்காரர், முன்னாள் கிராம சபைத் தலைவர்)

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தவவிநாயகம் அவர்கள் கடந்த 10-04-2001 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் இறைவனடி சேர்ந்தார்.

இவர் அல்லைப்பிட்டி காலஞ்சென்ற திரு.திருமதி.செல்லத்துரை (உடையார்), சொர்ணம்மா அவர்களின் அன்பு மகனும் கிருஷ்ணாம்பாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற டெனியாய பிரபல வர்த்தகர் வி.எம்.வேலுப்பிள்ளை (டெனியாய சின்னப்பர் நாரந்தனை), சிவனம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் கிருபாலினி, சந்திரகுமார், சூரியகுமார், தவபாலினி, ஜெயபாலினி, குணபாலினி, உருத்திரகுமார், சத்தியபாலினி (உரிமையாளர்கள் குமார்ஸ் குறூப் ஒவ் கொம்பனி பிரான்ஸ், றோயல் ஜுவல்லறி லண்டன், ராணி ஜுவல்லறி கொழும்பு, ஸ்மாட் சொய்ஸ் ட்ரவல்ஸ் - இந்தியா, லக்சுமி பலஸ் பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திரஜித் (லலிதா ஜுவல்லறி, ராணி ஜுவல்லறி கொழும்பு), தயாநாயகி (பிரான்ஸ்), பரமேஸ்வரி (பிரான்ஸ்), சிவநேசராஜா (பிரான்ஸ்), ரவீந்திரன் (றோயல் ஜுவல்லறி லண்டன்), ஜெயசீலன் (பிரான்ஸ்), சுஜவல்லி (இந்தியா), சிவானந்தன் (லக்சுமி பலஸ் பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், தையல்நாயகி (சுதுமலை), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (இலங்கை), சிவயோகலக்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற நடேஸ்வரி (லண்டன்), நடேசபிள்ளை (தொழிலதிபர் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருஞானசம்பந்தர் (சமாதான நீதிவான், விவாகப் பதிவாளர், சுதுமலை), இராசம்மா (கொழும்பு), காலஞ்சென்ற இரத்தினசபாபதி (தபால் அதிபர் சமாதான நீதிவான் அல்லைப்பிட்டி), சச்சிதானந்தம் (முன்னைநாள் உதவி ஆணையாளர் (A.C.P.) இந்தியா), மங்கையற்கரசி (யாழ்ப்பாணம்), ரகுநாதன் (பிரான்ஸ்), யுகதாம்பாள் (இந்தியா), காலஞ்சென்றவர்களான இராமநாதன், குகநாதன், நகுலாம்பாள், புவனாம்பாள், சபாநாதன், புஸ்பகராம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அன்னாரது பூதவுடல் இன்று (19-04-2001) வியாழக்கிழமை காலை சமய ஆசாரக் கிரியைகளின் பின்னர் 11.00 மணியளவில் 95, RUE MAROOL SEMBAR 93400 VILLETANCUSE மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்மார்.

வீட்டு முகவரி:-
*7, Avdela Reunion,*
*93600 Aulnay S/Bois- Quattier,*
*Nonneville.*

*தொடர்புகளுக்கு:-*
Tel. 01 48684169 / 0619024655 / 0620543516

(C/16353)

## கந்தையா பாலசுப்பிரமணியம்

(ஸ்கூட்டர் பாலா மாஸ்ரர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் 16-04-2001 திங்கட்கிழமை கொழும்பில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதிகளின கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற செல்லையா அவர்களின் பெறாமகனும், காலஞ்சென்ற ஐயாத்துரை - பூரணம் தம்பதிகளின் மருமகனும் பத்மசோதியின் அன்புக் கணவரும், சிவசத்தி, சிவகுமார், சிவதர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், குலேந்திரன்(என்ஜினியர் ISF - கொழும்பு) அவர்களின் அன்பு மாமனாரும் திவ்வியாவின் அன்பு கனிந்த பேரனும் கதிரவேல் ஐயாவின் அருமைத் தம்பியும் அழகம்மா, பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும் இராஜேஸ்வரியின் அண்ணனும் நாகசாயி ஜனனியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(19-04-2001) வியாழக்கிழமை நண்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
மனைவி,மக்கள், மருமகன்,சகோதரன், மைத்துனர்.

*M.S லேன்,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*
(86824)

மண்ணுக்காய் மலர்வு
05 - 06 - 1961



உண்மைக்காய் உதிர்வு
19 - 10 - 2000

# நினைவழியா நிமல்
## 6 ஆம் மாத நினைவஞ்சலிகள்

*உண்மைகளை உலகுக்கு எடுத்தியம்ப*
*உதிரத்தையே மையாகப் பேனாவுள் ஊற்றிக்கொண்டவனே!*
*உன் நினைவுகள் மறப்பதற்குரியவை அல்ல;*
*எங்கள் உயிரோடு அவை ஒன்றாகிவிட்டன!!*

# அமரர்
# மயில்வாகனம் நிமலராஜன்
(ஊடகவியலாளர்)

*நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பும்*
*யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் சங்கமும்.*

(C/16368)

## ஆபிரிக்க நாடான றுவாண்டாவில்
## இரு கன்னியாஸ்திரிகள் உட்பட
# 4 பேர் மீது படுகொலை வழக்கு!

கிகாலி, ஏப். 19

ஆபிரிக்க நாடான றுவாண்டாவில் இரு கன்னியாஸ்திரிகள் உட்பட 4 பேர் மீது இனப் படுகொலைக்கு உடந்தையாக இருந்ததாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு றுவாண்டாவில் துட்ஸி, ஹுட்டு ஆகிய இனப் பிரிவுகளிடையே ஏற்பட்ட இன மோதல்களில் சுமார் 5 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்.

அப்போது நடந்த இனப் படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

றுவாண்டாவின் தென் பகுதி நகரமொன்றின் தேவாலயம் மற்றும் அதன் அருகே இருந்த சுகாதார நிலையம் ஆகியவற்றில் தஞ்சமடைந்திருந்த ஆயிரக்கணக்கான துட்ஸி இன மக்கள் ஹுட்டு இனத்தவரால் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டனர்.

உலகை உலுக்கிய இந்தச் சம்பவம் தொடர்பாக தேவாலயத்தில் பணியாற்றிய இரு கன்னியாஸ்திரிகள் மீதும் இரு ஆண் பணியாளர்கள் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தம்மிடம் தஞ்சமடைந்திருந்த மக்கள் கொல்லப்படப்போவது, முன் கூட்டியே அறிந்திருந்தும் அவர்களை எச்சரிக்காமல் தேவாலயத்தை விட்டு வெளியேறியதாக இரு கன்னியாஸ்திரிகள் மீதும்-

இந்த இனப்படுகொலை திட்டமிட்டு நடத்த உடந்தையாக இருந்ததாக இரு ஆண் பணியாளர்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விசாரணைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு 6 வாரங்களில் தீர்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ-4)

## பிரியங்காவின் மைத்துனி கார் விபத்தில் பலியானார்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகன் பிரியங்கா காந்தியின் கணவனின் சகோதரி திங்கட்கிழமை இடம்பெற்ற கார் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஜெய்ப்பூரிலிருந்து புதுடில்லிக்குச் சென்று கொண்டிருந்த வழியில் ராஜஸ்தான் மாநிலத்தின் அல்வார் மாவட்டத்தில் இந்த விபத்து இடம்பெற்றது.

காரின் ரயர்களில் ஒன்று வெடித்தபோது திசை மாறிய கார் விபத்திற்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ நா. படையில் பங்களாதேஷ் வீரர்கள் அதிகம்

உலகெங்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஐ நா அமைதி காக்கும் படைகளில் பங்களாதேஷ் வீரர்கள் அதிகளவில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலவரங்கள் இடம்பெறும் நாடுகளில் ஐ நா. படைகளில் சுமார் 6 ஆயிரம் பங்களாதேஷ் வீரர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## குண்டு வெடிப்பு

பிரிட்டனின் லண்டன் நகரில் உள்ள தபால்களைத் தரம் பிரிக்கும் நிலையத்தில் குண்டு வெடித்ததில் தபால் நிலையக் கட்டடம் மோசமாகச் சேதமடைந்தது. எவரும் காயமடையவில்லை என்று தெரிவித்த பொலீஸார் தபாலில் அனுப்பப்பட்ட குண்டே வெடித்ததாகச் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

## பங்களாதேஷ் படை தாக்குதல்; இந்திய இராணுவம் பின்வாங்கல்!

சிலாங், ஏப். 19

இந்தியாவின் மேகாலயா மாநில எல்லைப் பகுதியில் பங்களாதேஷ் இராணுவத்தினர் தாக்கியதால், இந்தியப் படைகள் பின்வாங்கியுள்ளன.

இவ்வாறு மேகாலயா மாநில உள்விவகார அமைச்சர் பி.எச். ரம்ஸாத் தெரிவித்துள்ளார்.

மாநிலத் தலைநகரான சிலாங்கில்இருந்து 100 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள எல்லைப் பகுதியில் எல்லைப் பாதுகாப்புப் படையின் முகாமொன்று அமைந்திருந்தது.

இங்கு நடைபெற்றமோதல்களில் பின்வாங்கியுள்ள இந்தியப் படைகள் மீண்டும் தமது நிலைகளைக் கைப்பற்ற உதவுவதற்காக மேலும் படையணிகள் அனுப்பப்பட்டுள்ளன.

வழமையாக தரப்பினரிடையே இரு தரப்புகளுக்கும் இடையில் துப்பாக்கிச் சூடுகள் இடம்பெறுவதுண்டு.

ஆயினும் நிலைகளைக் கைவிட்டு இடம் மாறுவது இதுவே முதற்றடவை என்று இந்தியப் பாதுகாப்புத்துறை கூறியுள்ளது. (ஒ-4)

## மேற்குக்கரை நிலப்பரப்பில்
# ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து இஸ்ரேலியப் படையினர் வாபஸ்

காஸா, ஏப். 19

பலஸ்தீன நிலப்பரப்பில் ஆக்கிரமித்திருந்த இஸ்ரேலியப் படையினர் அங்கிருந்து வாபஸ் பெற்றுள்ளனர்.

பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேலியப் படையினர் கடந்த 3 நாள்களாக, மேற்கொண்ட தாக்குதல்களை அமெரிக்கா கண்டித்த சில மணி நேரங்களில் படைகளை இஸ்ரேல் வாபஸ் பெற்றது.

காஸாவின் பெய்ட்ஹனூமில் பலஸ்தீன அகதி முகாம்கள் இந்தப் பகுதிக்குள் யுத்த டாங்கிகள் மற்றும் புல்டோசர்கள் சகிதம் நேற்று முன்தினம் இஸ்ரேலியப் படைகள் நுழைந்தன. பலஸ்தீன நிலைகள், கடைகள், வீடுகள் ஆகியவற்றை இடித்துத் தள்ளி தாக்குதல் நடத்தி அப் பகுதியை இஸ்ரேல் ஆக்கிரமித்தது.

ஆக்கிரமிப்பு நிகழ்ந்த 2 மணித்தியாலங்களுக்குள் இஸ்ரேலியப் படைகள் அங்கிருந்து வாபஸ் பெற்றுள்ளன.

இதற்கிடையில்,

லெபனானில் அமைந்துள்ள சிரியாவின் ரேடார் நிலைகள் மீது இஸ்ரேலிய விமானங்கள் நடத்திய விமானத் தாக்குதலில் சிரிய ராணுவத்தினர் மூவர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு ரஷ்யா கவலை தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் நடைபெறும் இத்தகைய சம்பவங்கள் தமக்கு கவலை தருவதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டுமெனவும்—

தீவிர தாக்குதல்களை தவிர்க்க வேண்டுமெனவும் ரஷ்யா கேட்டுள்ளது.

( ஒ - 4 - 6 )

# பிரபாகரன் மீது புலிப் போராளிகள் ஆத்மார்த்தமான ஈடுபாடு, மதிப்பு

## நேரில் கண்டவற்றை,கேட்டவற்றை விவரிக்கிறார் மேரி கத்தரின்

**வன்னிக்குச் சென்று திரும்பிய வேளை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ள லண்டன் 'சண்டே ரைம்ஸ்' செய்தியாளர் மேரி கத்தரின் கொல்வின், வன்னியில் இருந்த போது அங்கிருந்து தமது பத்திரிகைக்கு அனுப்பிய செய்தித் தொகுப்பு இது.**

**அவரின் இந்தச் செய்தித் தொகுப்பு இணையத் தளத்தில் வெளியாகி இருந்தது.**

விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு இணக்கமான வார்த்தைகள்இலகுவில் வந்துவிடுவதில்லை. அவரது ஊன்றுகோல், மூன்று தடவைகள் அவருக்கு ஏற்பட்ட படுகாயங்களுக்குக் கிடைத்த கொடை.

60 ஆயிரம் உயிர்களைப் பலி கொண்ட, 18 வருட கால யுத்தத்தில், முதல் தடவையாக, சுதந்திர தனி நாட்டுக்காகப் போரிடுவதற்குப் பதிலாக சுயாட்சித் தாயகத்தை ஏற்கத் தயாராக விடுதலைப் புலிகள் உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தமிழ்ச்செல்வனின் செய்தி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் நெறிப்படுத்தப்பட்டுள்ளது:

''அரசியல் தீர்வுக்குக் கட்டாயம் இடமுண்டு அதன் பெயர் ஒரு பொருட்டில்லை. சமஷ்டியாகவோ, கூட்டமைப்பாகவோ, வடக்கு-கிழக்கு சபையாகவோ சுயாட்சிப் பிராந்திய மா]கவோ அது இருக்கலாம். எமது சம உரிமை, கௌரவம், நீதி ஆகியவற்றுக்கு அந்தத் தீர்வு உத்தரவாதமளிக்க வேண்டும். கொழும்பில் உள்ள பௌத்த பிக்குகள் வடிவமைக்கும் வாழ்க்கை முறை எமக்குத் தேவையில்லை'' என்கிறார் சு. ப. தமிழ்ச்செல்வன்.

இந்த முடிவு இராணுவரீதியிலான பலவீனத்தால் எடுக்கப்பட்டதல்ல. கடந்த ஏப்ரலில் ஸ்ரீலங்காப் படையை நெருக்குதலுக்கு உள்ளாக்கி ஆனையிறவுப் படைத் தளத்தைக் கைப்பற்றியதுடன், இராணுவச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு தமக்கு முக்கியமான குடாநாட்டின் கழுத்துப் பகுதியை விடுதலைப்புலிகள் இறுக்கினார்கள்.

### 50 வீத நிலப்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டில்

இப்போது அவர்கள் சொந்த மண்ணாக உரிமை-கோரும் நிலப்பரப்பில் 50சதவீதமான நிலத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். வன்னியிலிருந்து இராணுவத்தைத் துடைத்தெடுத்து பெரும் நிலப்பரப்பில் உள்ள 4 தமிழர் பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

யுத்தத்தில் தம்மைத் தோற்கடிக்க முடியாத நிலையிலும், வெல்லக்கூடிய திறன் உள்ளபோதும் யதார்த்த நிலைப்பாடே விடுதலைப் புலிகளின் முடிவுக்குக் காரணமாகும்.

அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். வன்னிப் பிரதேசத்தை இராணுவமும், கடற்படையும், பொருளாதாரத் தடைகளும் சுற்றி வளைத்துள்ளன. பத்திரிகையாளர்கள் அங்கு செல்ல இலங்கை அரசால் தடைவிதிக்கப்பட்டுள்ளது

இராணுவ வெற்றி மூலமான தீர்வை விடுதலைப் புலிகள் பெற முடியாது என்றே தோன்றுகிறது. அதனால் அவர்கள் சுதந்திர தனி நாட்டுக் கோரிக்கையில் இருந்து சுயாட்சிக்கு மாறியுள்ளதாகக் கருதப்படுகிறது.

### பொதுமக்களிடம் இராணுவ 'பாஸ்'

விடுதலைப் புலிகளின் தலைமையகம் உள்ள மல்லாவிக்குப் பயணிப்பது அவர்களின் பன்முகச் செயற்பாடுகளை அறிய உதவுகிறது.

வடக்கில் அரசினால் அதிகமாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட வவுனியாவிலிருந்து புலிகளின் ஆதரவாளர்களான பொது மக்கள் சிலருடன் புறப்பட்டேன். அவர்களிடம் இராணுவத்தால் வழங்கப்பட்ட 'பாஸ்' இருந்தது சோதனைச்சாவடிகளில் கேட்டால் கந்தஉடையார் பூவரசன் குளத்துக்குப் போவதாகக் கூறும்படி அவர்கள் என்னிடம் கூறியிருந்தனர். ஆனால் அதிர்...டவசமாக எவரும் கேட்கவில்லை.

## விடுதலையின் அவசியத்தை உணர்ந்துள்ள மக்கள்

மேற்குக்கடற்கரை நகரான மன்னார் அருகே ஒரு பாடசாலையில் இரவு தங்கினேன். அந்தப்பாடசாலை அதிபருடன் உரையாடிய போது, தான் யுத்தத்தை விரும்பவில்லை என்று கூறினார்.

''ஆனால் எமது உரிமைகளைப் பெறுவதற்கு வேறு வழியில்லை'' என்றும் அவர் தெரிவித்தார்.

### 10 புலிகள் வந்தனர்

அதிகாலை நேரத்தில் 10 விடுதலைப்புலிகள் அங்கு வந்தனர். அனைவரும் தானியங்கி ஆயுதங்கள் வைத்திருந்தனர். நாம் அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இருக்கும் நினைப்பு அவர்களில் ஒருவருக்குக்கூட இருக்கவில்லை.

நான் அவர்களுடன் ஒரு டிராக்டரில் முந்திரித்தோப்பினூடாகப் பயணத்தைத் தொடர்ந்தேன். அந்த மண் பாதை குறுகி, அடர்ந்த காட்டின் ஊடாகச் சென்றது. நெருக்கமாக அடர்ந்திருந்த மரங்கள் பச்சைக் குகைக்குள் செல்வது போன்ற உணர்வைத் தந்தது.

வழிகளில் இருந்த மிதிவெடிகளில் துரதிஷ்டவசமாக நம்மில் யாராவது மிதித்திருந்தாலும், அனைவரும் காயமடைந்திருப்போம் வழியில் இருந்த ஆறு ஒன்றை போராளிகளின் உதவியுடன் தாண்டிச் சென்றோம்.

இரவு 9 மணியளவில் இராணுவப் பகுதிக்கும், புலிகளின் பகுதிக்கும் இடையிலிருந்த பிரதான வீதியைக் கடந்து மல்லாவி நோக்கிச் சென்றோம்.

போகும் வழியில் புலிகள் தத்தமது கதைகளை என்னோடு பகிர்ந்து கொண்டனர். அவர்களில் அநேகர் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களின் குடும்பத்தினர் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். அந்த விடுதலைப் புலிகள் பிரபாகரனிடம் ஆத்மார்த்தமான ஈடுபாடு, மதிப்பைக் கொண்டுள்ளனர்.

( 9 ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியையான
செல்வி றோ. கிறிஸ்ரோபரின்
(ஞானேஸ் ரீச்சர்)
அருமைத் தாயாரான

## திருமதி மக்டலின் கிறிஸ்ரோபர்

அவர்கள் காலமான செய்தி கேட்டு மனம் வருந்துகின்றோம். அன்னாரின் மறைவையொட்டி துயருறும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உ. நிரோஷன்
உ. நிவேதிகா
உ. விதுஷன்

77/2, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
நேற்று (18-04-2001) உதயன் பத்திரிகையில் வெளியாகிய கண்ணீர் அஞ்சலியில் ஞானேஸ் ரீச்சர் என்பதற்கு பதிலாக ''ஞானேஸ் பீட்டர்'' என தவறுதலாக வந்துவிட்டது. (சி/16364)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் எழுதுநராகக் கடமைபுரியும்
செல்வி றோஸ் கிறிஸ்ரோபர்
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மக்டலின் கிறிஸ்ரோபர்

(செல்லம்மா)

அவர்கள் மரணமான செய்தி கேட்டு மிக மனம் வருந்துகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர், பொருளாளர்,
நிர்வாகசபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள்.
யாழ். செள. சே. கூ. சி. சே. க. நி.சங்கம்.
பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (86833)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை தங்கராசா

(ஓய்வுபெற்ற R. M. P. வைத்தியர் (தர்மபுரம்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோயிலடி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தங்கராசா 13-4-2001 வெள்ளிக்கிழமை தர்மபுரத்தில் காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மாணிக்கத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகர் சின்னக்குட்டியின் மருமகனும், மற்றும் அனுஷாவின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம் செந்தூர்ச்செல்வனின் மாமனாரும், மயூரன், விருத்திகா, ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13-4-2001 இல் தர்மபுரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. தவமணி (மனைவி)
சு. செந்தூர்ச்செல்வன் (மருமகன்)
செ. அனுஷா (மகள்)
ஐயனார் கோயிலடி, சுன்னாகம். (86831)

## நாகலிங்கம் பொன்னம்பலம்

'கேணிக்கரை', சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த நாகலிங்கம் பொன்னம்பலம் அவர்கள் நேற்று (18-04-2001) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதிகளின் ஏக புத்திரனும் பூமகளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் சகோதரரும் வத்சலாதேவி, வஸ்தலானந்தன் (சுவிஸ்), வத்சலாவதி (ஹொலன்ட்), சத்தியானந்தன் (சுவிஸ்), தயானந்தன் (ஆசிரியர், யா/சுதுமலை வடக்கு த.க. வித்தி.), தயாபாலினி (சுவிஸ்), சிவசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகநாதன், கலாவதி (சுவிஸ்), சிவகுமாரன் (ஹொலன்ட்), குமாரசாமி (சுவிஸ்), மகேந்திரராஜா (இணுவில்) ஆகியோரின் மாமனாரும் ரிஷிகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), தர்ஷிகா (சென்ற். ஆன்ஸ் றோ. க. பாடசாலை, மானிப்பாய்), கீர்த்தனன் (சுவிஸ்), ரஸ்மிதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-4-2001) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. தயானந்தன்
(மகன்)
'கேணிக்கரை',
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (86830)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

★ காலை 8 மணி — 17 வயது—யாழ். மத்திய கல்லூரி எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

★ 19 வயது—யாழ். வலய முதல் அணி எதிர் வரணி ம. வி. (க-3)

★ ★ ★

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச சபையினால் பதிவு செய்யப்பட்ட சனசமூகநிலையங்களுக்கிடையேயான எல்லே விளையாட்டுச் சுற்றுப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்குப் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் எட்டு சனசமூக நிலையங்கள் கலந்து கொள்ளவுள்ளன. (க-86)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 19

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் கே. எவ். எவ். எவ். வெற்றிக்கிண்ணத்துக்காக கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 8-30 மணி —பல்கலைக் கழக அணி எதிர் பத்ரீஸியன் அணி.

★ பிற்பகல் 1 மணி — கிறாஸ் கொப்பஸ் அணி எதிர் ஓல்ட்கோல்ட்ஸ் அணி. (க-3-86)

★ ★ ★

வலி. வடக்கு, ஏப். 19

வலி. வடக்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் நடத்தும் இளைஞர் கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் தி.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச செயலாளர் திருமதி ப. திலகநாயகம் போலும், சிறப்பு விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபைத்தலைவர் திருமதி பா. ஸ்ரீபாஸ்கரனும், கௌரவ விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் தி. சிவதெட்சணாமூர்த்தி, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி அ. சத்திவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-86)

# செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.19

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான ''ஆசிரியர் நிலையம்'' தொடர்பான அறிவூட்டல் செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளை 20 ஆம் திகதி சாவகச்சேரி கோட்ட அதிபர்களையும் நாளை மறுதினம் 21 ஆம் திகதி பளை, கொடிகாமம் கோட்ட அதிபர்களையும், 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி மூன்று கோட்டங்களையும் சேர்ந்த உதவி அதிபர்களையும் இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

இடம்:- பட்டப்படிப்புக்கள் கல்லூரி
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
காலம்:- நாளை (20-04-2001)
வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி

இந்தக் கலந்துரையாடலுக்கு அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் தவறாது சமூகம் தரவும்.

தலைவர், செயலாளர்,
தொண்டர் ஆசிரியர் சங்கம் - யாழ்.மாவட்டம். (86811)

ஆவரங்கால்
# கலைச்சோலை நாடக மன்றம்
நடத்தும்
## போட்டி நிகழ்ச்சிகள்

காலம்: 20-04-2001 வெள்ளிக்கிழமை
இரவு 7.30 மணி
இடம்: ஆவரங்கால் சந்திக்கு அருகில்

★ நிக்ஷன் பல்பொருள் வாணிபம், அச்சுவேலி — ஆதரவில் தேனிசைமழை

★ லாலா சோப் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் — பிறேக்டான்ஸ்

★ நிஷாந்தினி பல்பொருள் வாணிபம், அச்சுவேலி — ஆதரவில் தனிநபர் நடிப்பு

அத்துடன் ''அப்புக்கு வாய்ச்ச பேய்க்குஞ்சு'' நகைச்சுவை நாடகம் ''தெய்வ மலர்'' சமூக நாடகம் என்பனவும் இடம்பெறும்.

அன்பளிப்பு: பெரியவர்கள் 20 ரூபா
சிறுவர்கள் 10 ரூபா

பங்குகொள்ள விரும்புவோர்
உடன் தொடர்பு கொள்ளவும்.

(86800) — நிர்வாகம்

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கான தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

### பிராந்திய இணைப்பதிகாரி - யாழ்ப்பாணம்

தகைமைகள்:

1. பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.
2. மனித உரிமைகள் மேம்பாட்டில் 5 வருட அனுபவம்.

வயது: 40 வருடங்களுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம்: ரூபா 7510 — 16 X 205 — 10790 மாதமொன்றுக்கு.

### விசாரணை அலுவலர் - யாழ்ப்பாணம்

தகைமைகள்:

க. பொ. த உயர்தரம் ஒரே தரத்தில் 3 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3 மொழிகளில் தேர்ச்சி.

விசாரணை சம்பந்தமான வேலை அனுபவம். மனித உரிமைகள் சம்பந்தமான அறிவும், அரச சார்பற்ற நிறுவனங்களில் அல்லது கல்விசார் நிறுவனங்களில் அல்லது அரச நிறுவனங்களில் மனித உரிமைகள் சம்பந்தமான ஆய்வு மற்றும் பயிற்சி என்பன மேலதிகத் தகைமைகளாகக் கணிக்கப்படும்.

வயது: 30 வருடங்களுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம்: ரூபா 6615 — 16 X 205 — 9895 மாதமொன்றுக்கு.

குறிப்பு: மேற்படி சம்பளங்களை உயர்த்த ஆணைக்குழு ஆலோசனை செய்கிறது.
சான்றிதழ்களின் பிரதிகள் அடங்கிய சுயவிவரக் கொத்துடன் விண்ணப்பங்கள் கொழும்பு - 8, இல. 36, கின்ஸி வீதி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, செயலாளர் நாயகத்துக்கு 05-05-2001 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்;

தலைவர்.
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
(இ/16365)

உதயன்

## பரீட்சார்த்த சிந்தனையேனும்...

அரசாங்கம் தனது ஐந்து நாள் போர்நிறுத்தத்தை நீடிக்கவில்லை.

சிங்கள - தமிழ்ப் புத்தாண்டு இரு இனத்தவர்களுக்கும் பொதுவான பண்டிகைக் காலம். அதனைக் கருத்தில் கொண்டு, நல்லெண்ண நடவடிக்கையாக அரசு ஐந்து நாள் போர்நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தியது.

அரசின் இந்தச் சமாதானச் சமிக்ஞை உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நல்ல சகுனம் என்று மக்கள் கருதினார்கள். அதனால் வரவேற்றார்கள். அத்தோடு நிற்கவில்லை; போர்நிறுத்தத்தை அரசு நீடித்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் என்று நம்பினார்கள்.

ஜனாதிபதி வெளிநாடு செல்வதற்கு முன்னர் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் போரைக் கொடியது என்று வர்ணித்தார். அதனை முடிவுக்குக் கொண்டு வர சகலரும் திடசங்கற்பம் பூணவேண்டும் என்று அறைகூவலும் விடுத்திருந்தார். போருக்கு முடிவு கட்டுவதற்குப் புத்தாண்டு தூண்டுதலாக இருக்க வேண்டும் எனவும் விருப்பம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் புத்தாண்டுச் செய்தியும் போர்நிறுத்தமும் ஒன்றிப்பதாக, ஒன்றிணைவதாக அமைந்ததால் போர்நிறுத்தத்தை நீடிக்கும் மனப்பாங்கு அரசுக்கு உண்டு எனற நம்பிக்கை எல்லோருக்கும் எழுந்தது. ஆனால் மக்கள் ஏமாந்துவிட்டார்கள். அவர்களது நம்பிக்கை தவிடுபொடியாகிவிட்டது. அரசு தனது போர்நிறுத்தத்தை நீடிக்கவில்லை.

பேச்சுவார்த்தை ஆரம்பமான பின்னரே நீண்ட காலத்துக்கான போர்நிறுத்தம் குறித்துப் பரிசீலனை செய்ய இயலும் என்ற நிலையை அரசு தளர்த்துவதாக இல்லை.

போர்நிறுத்தம் செய்து, சமாதானப் பேச்சுக்கு உகந்த சூழ்நிலையை உண்டாக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கூறுவதை அரசாங்கம் ஒரு நிபந்தனையாகக் கருதுகிறது. விடுதலைப் புலிகளின் நிபந்தனைக்கு இணங்கக் கூடாது. அவர்களை நம்பமுடியாது. பேச்சுவார்த்தை என்று வந்துவிட்டு அதனை முறித்துக் கொண்டு மீண்டும் போரை நாடுவார்கள் என்று உள்ளூர அஞ்சுகிறது.

அதனால் போர்நிறுத்தம்; போர்நிறுத்த நீடிப்பு என்பதெல்லாம் அரசுக்கு ஒவ்வாமைப் பொருள்களாகிவிட்டன. உண்மையில் புத்தாண்டுகாலப் போர்நிறுத்தம் வெறும் போலித்தனம் கொண்டதாகிவிட்டது. அதனை அரசு வெசாக் வரையாவது முதலில் நீடித்து தனது நல்லெண்ணத்தை ஊர்ஜிதப்படுத்தி இருக்கலாம்.

ஆனால் அரசு அவ்வாறு செய்யாது என்பதனை ஊர்ஜிதப்படுத்தும் தகவல்களே வந்து கொண்டிருக்கின்றன.

செக் குடியரசிடமிருந்து தருவிக்கப்பட்ட நவீன ஆயுதங்கள், நவீன ஆயுதத் தளபாடங்கள் கப்பல் கப்பலாகக் கொண்டு வந்து குவிக்கப்படுகின்றன.

அதேபோன்று இராணுவத்துக்கு ஆள் திரட்டும் பணிகளும் வெகுவேகமாக, வெகு மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

அதாவது அழிவு தரும் கொடிய போரைத் தொடர்வதற்கான சகல ஆயத்தங்களும் கச்சிதமாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆயத்தங்கள் ஜனாதிபதி சந்திரிகாவின் புத்தாண்டு அறைகூவல் வெறும் பகட்டு வார்த்தைகளே என்று சந்தேகிக்க வைக்கின்றன.

சமாதானத்தைக் கொண்டு வருவதில், அதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதில் அரசுக்கு எந்தளவு பொறுப்பு உண்டோ அதே அளவு பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கும் உண்டு என்று ஆளுங்கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜயரத்ன சொல்கிறார்.

அது உண்மை. இரண்டு தரப்புகளும் மக்களின் பிரதிநிதிகள் என்பதால் சம பொறுப்புகள் உண்டு. ஆனால் விடுதலைப் புலிகள் போர்நிறுத்தம் செய்து மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளார்கள். அரசாங்கமும் பரீட்சார்த்தமாகவேனும் ஏன் அந்த வழியில் சிந்திக்கக் கூடாது? இது விடயத்தில் பிசகுத்தனமற்ற தெளிவான சிந்தனையும் தளர்வற்ற செயற்பாடும் இன்றியமையாதவை. இல்லையேல் ......

### சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் வேளை

# சட்டச் சிக்கல்கள் வருவதைத் தடுக்க புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்

### மஹகல்கடவல தேரர் கோரிக்கை

கொழும்பு,ஏப்.19

தங்கள் மீதுள்ள தடையை நீக்க வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர். தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றுடன் பேச்சுவார்த்தை நடத்தும்போது சட்டச் சிக்கல்கள் ஏற்பட இடமுண்டு. இனவாதிகள் சட்ட நடவடிக்கைகளை பேச்சுவார்த்தை இடம்பெறும் காலத்தில் மேற்கொண்டால் அது சமாதான முயற்சிகளுக்குப் பாதகமாக அமையும். எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஏழு கோறளைகளின் தர்மநிலையத்தின் தலைவரும் இலங்கையில் நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றப் போஷகருமான வணக்கத்துக்குரிய மஹகல்கடவல புஞ்யசார தேரர் கேட்டுள்ளார்.

தேரர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

சிறைக்கூடங்களிலும், தடுப்பு முகாம்களிலும் எவ்வித விசாரணைகளும் இல்லாமல் தீவிரவாதிகள் என்ற நாமம் சூட்டப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவிகளான இளைஞர், யுவதிகளை அரசாங்கம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நல்லெண்ண அடிப்படையில் தாங்கள் தடுத்து வைத்திருந்தவர்களை விடுதலை செய்துள்ளனர். அவர்கள் தடுத்து வைத்துள்ள ஏனையவர்களையும் விடுதலை செய்து குடும்பத்தவர்களுடன் இணைந்து கொள்ள வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளையும் தான் வேண்டுகிறேன்.

நீண்ட நாள்களாக இளைஞர்களும் யுவதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் அவர்கள் உளவியல் ரீதியாக பாதிப் படைந்துள்ளனர். அத்துடன் அவர்களின் இளமைக்காலம் எவ்வித பலனும் இல்லாமற் போவது கவலைக்குரிய விடயம். அத்துடன் நாட்டுக்கு பங்காற்றக் கூடிய அவர்களுக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது.

சமாதான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட உள்ள இக்கால கட்டத்தில் பெருமளவு இராணுவ தளபாடங்களை தருவித்து இராணுவத்தை நவீனமயப்படுத்துவது நன்மை தராது. எனவே அனைவரும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்று கூறியுள்ளார். (க)

## முல்லைக் கடற்சமர்: புலிகள் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.19

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ள காலப் பகுதியில் மூன்றாவது முறையாக கடற்புலிகளின் அணிகள் மீது கடந்த திங்களன்று கடற்படையினர் தாக்குதலை நடத்தியுள்ளதாகப் 'புலிகளின் குரல்' வானொலி கண்டித்துள்ளது.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த திங்களன்று அதிகாலை 1.45 மணிமுதல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் படகுகள் மீது கடற்படையினரின் அதிவேகப் பீரங்கிப் படகுகள் தாக்குதலை மேற்கொண்டதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

போர் நிறுத்தக் காலப்பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்து கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் சமாதானச் சூழலைக் கருத்தில் கொண்டு புலிகள் கடைப்பிடித்துவரும் போர்நிறுத்த அறிவித்தலை உதாசீனம் செய்யும் அரசின் போக்கையே இது எடுத்துக்காட்டுவதாகவும் 'புலிகளின் குரல்' வானொலிச் செய்தியில் மேலும் அறிவிக்கப்பட்டது. (க-4)

## புத்தூர், ஆவரங்கால் கடைகளில் காலாவதியான பொருள்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம்,ஏப்.19

புத்தூர் மற்றும் ஆவரங்கால் பகுதிகளில் உள்ள கடைகளில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அவை பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

கடந்த திங்களன்று புத்தூர், அச்சுவேலி,உரும்பிராய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கூட்டாக மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின் போது பழுதடைந்த மற்றும் காலாவதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டு கடை உரிமையாளர்களின் சம்மதத்துடன் அழிக்கப்பட்டன.

காலாவதியான லக்டோஜன் பால்மா பைக்கற்றுக்கள்,பிஸ்கட் வகைகள்,மாஜரின் மற்றும் எசன்ஸ் வகைகள் ஆகியனவே இவ்வாறு அழிக்கப்பட்டதுடன் இனிமேல் இவ்வாறு பழுதடைந்த மற்றும் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யக் கூடாதெனவும் கடை உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

பொதுச் சுகாதார பரிசோதகர்களான பொ.கோபாலேந்திரன், வே.இராஜேந்திரா, அ.ஜெயபாலன் ஆகியோரே இத் திடீர்ப் பரிசோதனையை மேற்கொண்டனர். (க-10)

## கரவெட்டி, கொக்குவில் இளைஞர் இருவரைக் காணவில்லையெனப் புகார்

யாழ்ப்பாணம்,ஏப்.19

கரவெட்டி, கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் காணாமல் போய்விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி நெடுந்தீவுக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்ற கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த கந்தராசா சுதர்சன் (வயது 18) என்பவர் இது வரை வீடு திரும்பவில்லை என்று இவரது சகோதரி முறைப்பாடு செய்துள்ளார்.

புத்தாண்டுத் தினத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற புத்தாண்டு விழாவுக்குச் சென்ற கொக்குவில் மேற்கைச் சேர்ந்த முத்துக்குமாரு தினேஸ்குமார் (வயது 20) என்பவர் காணாமல் போய்விட்டதாக இவரது உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம் முறைப்பாடுகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அதிகாரி சட்டத்தரணி என்.ஜீவேஸ்வரா படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார். (க-5)

## எரிபொருள் விலை உயர்வுக்கு ஐ.தே.க.வும் ம.வி.முவும் கண்டனம்

கொழும்பு,ஏப்.19

டீசல் விலை 3 ரூபாவினாலும், மண்எண்ணெயின் விலை ஒரு ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டதற்கு எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐ.தே.க. வின் துணைத்தலைவர் காமினி அத்துக்கோறளை தெரிவிக்கையில், மீண்டும் எரிபொருள்களின் விலைகளை அதிகரித்து மக்கள் மீது சுமைகளை ஏற்றுவதன் மூலம் சந்திரிகா ஆட்சி மேலும் அமைச்சரவை பதவிகளை உருவாக்க முயற்சிக்கிறது என்று கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தனியார் துறை ஊழியர் சங்கப் பிரதிநிதி கூறுகையில், இது ஐந்தாவது எரிபொருள் விலைஅதிகரிப்பு. தொழிலாளரால் இதனைத் தாங்க முடியாது. இதனால் சம்பள உயர்வுக்கான போராட்டங்களும், தொழிலாளர் மத்தியில் அமைதியின்மையும், நாட்டில் ஸ்திரமின்மையும் ஏற்படும் எனத் தெரிவித்தார். (க)

## இலக்கிய நூல் போட்டியில் பரிசு பெறும் எழுத்தாளர்கள்

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைசசு கடந்த வருடம் நடத்திய இலக்கிய நூல் பரிசுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

முடிவுகள் வருமாறு:-

★ நாவல் இலக்கியம் - காத்திருப்பு - தெளியான்,

★சிறுகதை இலக்கியம்- சிவாவின் கதைகள் - வண்ணை சே.சிவராசா,

★சிறுகதை இலக்கியம் - நீதிபதியின் மகன் - அழகு சுப்பிரமணியம் (மொழி பெயர்ப்பு - ராஜ ஸ்ரீகாந்தன்),

★நாடக இலக்கியம் - இல்லை இல்லை - ரூபாராணி ஜோசப் - பாஞ்சாலி சபதம் (மொழி பெயர்ப்பு - இராசையா பஞ்சலிங்கம்),

★கவிதை இலக்கியம் - மூன்று பரிசுகள்:- 1. மட்டக்களப்பு காவியம் - வாகரைவாணன், 2. புதுமை - ஏ.இக்பால். 3. சீனத்து கவிதைகள் (மொழி பெயர்ப்பு - சுந்தரேசன்),

★சிறுவர் இலக்கியம் - பாலர் கதைகள் - சபா ஜெயராசா.

★சமய இலக்கியம் - தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - நவநாயக மூர்த்தி,

★ஆய்வு இலக்கியம் - இரண்டு பரிசுகள்:- 1.ஈழத்து தமிழ் நாவல்களில் சில - கே.எஸ்.சிவகுமாரன், 2. தமிழிசை மரபு - பேராசிரியர் எஸ்.கே சிவபாலன்,

★பல்துறை இலக்கியம் - ஐந்து பரிசுகள்:- 1. கல்வி - முகாமைத்துவ நுட்பங்கள் - ந.ஆனந்தராஜ், 2.இலக்கியம் - உரைநடைத் தெளிவு ஓர் அறிமுகம் - வாசுகி சொக்கலிங்கம், 3. கட்டுரை - பின் நவீனம் ஓர் அறிமுகம் - சோ.கிருஷ்ண ராஜா, 4. வரலாறு - இசைநாடகக் கூத்து மூத்த கலைஞர்கள் வரலாறு - மெட்றாஸ் மயில், 5. கட்டுரைத் தொகுப்பு - பொச்சங்கள் - வ.அ.இராசரத்தினம். (க-3)

## 'ரிவிரச' நடவடிக்கையின் போது கைவிட்ட தங்க ஆபரணங்களை உரிமை கோரி விண்ணப்பிக்க இறுதிச் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.19

1995ஆம் ஆண்டு 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையின் போது கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டு யாழ். அரசாங்க அதிபரிடம் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள், பிஸ்கெட்டுகள், தகடுகளை உரிமை கோருவதற்கான திகதி இறுதித் தடவையாக மே மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இத் திகதிக்கு முன்னதாக இவற்றுக்கு உரிமை கோருபவர்கள் மேற்படி பொருள்களில் எழுத்து அடையாளங்கள், வேலைப்பாடுகள், மாதிரி அமைப்பு, நிறை ஆகியவற்றை குறிப்பிட்டு எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் கேட்டுள்ளார்.

குறிப்பிடப்படும் விபரங்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட நகைகள், பிஸ்கெட்டுகள் ஆகியவற்றை கையளிக்கும் போது பொதுமக்களுக்கு அறியத்தரப்படும் என்றும் முன்னர் இது பற்றி எழுத்து மூலம் அறியத் தந்தவர்கள் மீண்டும் அறியத்தரத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-5)

### நாளை

சித்திரை 07
வெள்ளிக்கிழமை
திதி: சுவாதசி
முன்னிரவு : 7.26 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
நள்ளிரவு : 12.27 வரை
சுபநேரம் : 6.02 - 7.32
ராகுகாலம் : 10.32 - 12.02
பகலுக்கும் இரவுக்கும்
பழைய நேரப்படி

### உதயவாக்கு

தலையைக் காட்டிலும், உன் நாக்குக்கு விடுமுறை கொடு.

## சமாதானப் பேரவையினர் இன்று கைதடிப் பகுதிக்குச் செல்கின்றனர்

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள தேசிய சமாதானப் பேரவையினரும் தென்பகுதி பத்திரிகையாளர்களும் இன்று கைதடிப் பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள அழிவுகளைப் பார்வையிடவுள்ளனர்.


நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்த இவர்கள் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள மூத்த பிரஜைகள், சட்டத்தரணிகள் உட்பட பலரைச் சந்தித்தனர்.

இன்று கைதடிக்கு விஜயம் செய்யவுள்ள இவர்கள் அதற்கு முன்னதாக யாழ்.ஆயர் மற்றும் தொழிற் சங்க தலைவர்கள், கூட்டுறவு பிரதிநிதிகள், தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் உட்பட பலரைச் சந்திக்கவுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை வண்ணைச் சிவன் கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில் போன்றவற்றுக்கும் செல்லும் இவர்கள் நல்லை ஆதீன முதல்வர், இந்து பிரமுகர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும், செஞ்சிலுவைச் சங்கம், லயன்ஸ் கழகம் போன்றவற்றின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளனர்.

சனிக்கிழமை முழுநாளும் யாழ். பல்கலைக்கழக சமூகத்தினரைச் சந்தித்து உரையாடும் இவர்கள் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்புவர். (க-5)

# உளமார வாழ்த்துகின்றோம்



## உயர்திரு. நடராசா மதனராஜா

(ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத் தலைவரும்,
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்,
யாழ்.மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதி அமைப்பாளரும்,
தீவக விளையாட்டுக் கழகங்களின் ஒன்றிய போஷகரும்)

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையை இட்டும் அவரது சேவைகள் பல துறைகளிலும் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தீவக விளையாட்டுக் கழகங்களின் ஒன்றியம்,
தீவகம்.

(86793)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்

மண்ணில்
23
-
02
-
1915



விண்ணில்
20
-
03
-
2001

திருமதி
## இராசமணி கணபதிப்பிள்ளை
(சிங்கப்பூர் - சரசாலை வடக்கு)

20-03-2001 இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19-04-2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி அ.இராமநாதன்,
(மகள் - மருமகன்)
மஞ்சுளா (பேர்த்தி)

தற்போதைய முகவரி:
*சம்பியன் லேன்,*
*கொக்குவில்.*

(C/16360)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18
-
08
-
1933



உதிர்வு
11
-
05
-
1999

## அமரர் சதாசிவம் சண்முகம்
(ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

திதி:- 19.04.2001

ஆண்டுகள் இரண்டு ஆனாலும் ஆறாது எங்கள் துயர்!
ஈன்றதும் போதாது என்று இன்பமாய் எமை வாழ வைத்த
ஆருயிர்த் தந்தையே! இடம்பெயர்ந்த வேளையிலும்
இடர் வந்து சூழ்ந்தாலும் உமை நாம் மறவோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:-
*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

தற்காலிக முகவரி:-
*'ஈஸ்வரி வாசா'*
*வதிரி, கரவெட்டி.*

துயருறும்
- குடும்பத்தினர்.

(86765)

## சைவ சமய உயர் தகைமை தேர்வுப் போட்டி

சைவநீதி நிர்வாகக்குழு நடத்தும் சைவசமய உயர் தகைமைத் தேர்வுப்போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி முற்பகல் 10மணி முதல் 11.40 மணிவரை யாழ்இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவிருக்கின்றது.

தேர்வு நாடிகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் -

அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் அவற்றை தேர்வுமண்டபத்தில் பெறலாம் என்றும் - சைவநீதியின் நிர்வாக ஆசிரியர் அறிவித்துள்ளார். (க-3)

## பறிமுதல் செய்த அ.அட்டைகள் மீளக் கையளிப்பு

ஊர்காவற்றுறை ஏப்.19

ஊர்காவற்றுறையில் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட மீனவர்களின் அடையாள அட்டைகள அவர்களிடம் மீளக் கையளிக்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறைக்கும் - காரைநகருக்கும் இடைப்பட்ட-கடற்பகுதியில் கடந்த புதன்கிழமை அதிகாலை கடலட்டை பிடிப்பதில் ஈடுபட்டிருந்த சமயம் அடையாள அட்டைகள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

நான்கு தினங்களின் பின்னர் கடந்த ஞாயிறு தம்பாட்டியிலுள்ள கடற்படையினரின் முகாமில் வைத்து அ.அட்டைகள் வழங்கப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர். (க-16)

## திருப்பாடுகள் காட்சி

நெல்லியடி அந்தோனியார் ஆலய முன்றிலில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணி முதல் 'மரணத்தை வென்ற மாபரன்' திருப்பாடுகள் காட்சி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யேசுவின் வாழ்க்கை வரலாற்றை இக் காட்சி சித்திரிக்கின்றது.

கடந்த 10ஆம் திகதி இடம்பெறவிருந்த இந்த நிகழ்வு மழை காரணமாக பிற்போடப்பட்டிருநதது. (3)

## வெளிநாட்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நவீன 'டிஸ் அன்ரனா' கொக்குவில், நல்லூர் பொது நூலகங்களில் பொருத்தப்பட்டு வெளிநாட்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

இந்த அன்ரனாவில் இருந்து இணைப்புக்கள் குறிப்பிட்ட இரு நூலகங்களுக்கு அருகில் உள்ளவர்களுக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் -

அந்த இணைப்பைப் பெற விரும்புபவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமபடியும் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் என்.மணிபல்லவராஜன் கேட்டுள்ளார். (க-3)

## அன்னை பூபதி நினைவு தினம் இன்று

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை இந்திய இராணுவம் ஆக்கிரமித்திருநத வேளையில், அதனை எதிர்த்து சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் 13 ஆவது வருட நினைவு தினம் இன்று வியாழக்கிழமை மட்டக்களப்பு, வன்னியில இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை ஒட்டி இன்று பூரண ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு தென் தமிழீழ மாதர் அமைப்புகளின் ஒன்றியம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள பொது அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், கல்வி நிறுவனங்கள், திணைக்களங்கள் என்பவற்றுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (க-4)


சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி.
A/L 2003
கலை, வர்த்தக
மாணவர்களுக்கு.....
ஓர் அறிவித்தல்
வரணி, மிருசுவில்,
விடத்தற்பளை, கொடிகாமம்,
மந்துவில் மாணவர்கள்
அனைவருக்கும்.
சைவப்புலவர் திரு.கமலநாதன், திரு.கருணாநிதி ஆசிரியர்களின் வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. சகல மாணவர்களும் 21.04.2001 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சமுகம் தரவும்.
(86768) -நிர்வாகி.


# சமாதானத் தீர்வு முயற்சிகளுடன் படைக்கு ஆள் திரட்டலும் மும்முரம்

சமாதான முயற்சிகள் நடைபெற்றுவரும் அதேவேளை, ஆயுதக் கொளவனைவும் படைக்கு ஆள் திரட்டும் நடவடிக்கையும் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.

அண்மைக் காலத்தில் இலங்கை இராணுவத்துக்கு 3500 பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தப்பியோடிய 4500 பேருக்கு மேற்பட்டவர்கள் மீண்டும் படைகளில் இணைந்து கொண்டுள்ளனர் என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை, கிழக்குப்பகுதிக்கு அண்மையில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகள் சென்று திரும்பிய பின்னர் அங்கு புலிகளின் ஆட்சேர்ப்பு அதிகரித்துள்ளதாக இலங்கை இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (க-9)



## காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

மேற்படி கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நிகழும் சித்திரை மாதம் 7ஆம் நாள் (20-04-2001) வெள்ளிக்கிழமை காலை 7-28 மணிமுதல் 8-30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. எனவே அடியார்கள் கிரியா காலங்களில் ஆசாரசீலராய் வருகை தந்து சுவாமி தரிசனம் செய்து முருகன் அருளைப் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

### *கிரியா விவரம்*

இன்று சித்திரை மாதம் 6 ஆம் நாள் (19-04-2001) வியாழன் அதிகாலை 5.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பம்.
பிற்பகல் 3.00 மணிக்கு கும்பங்கள் யாகசாலைப் பிரவேசம், கும்ப பூசை, தேவாரபாராயணம்.
நாளை சித்திரை மாதம் 7ஆம் நாள் (20-04-2001) வெள்ளி காலை யாக பூசை பூர்ண ஆகுதி காலை 7.28 - 8.30 மணிக்குள் பாலஸ்தாபன கும்பாபிஷேகம்.

- திருப்பணிச் சபையினர்

*சிறப்புற வாழ்த்துவோர்:*
அற்புதா ரேடிங் கோ
ஆஸ்பத்திரி-வீதி, யாழ்ப்பாணம். (86716)

# முதலாம் ஆண்டு நினைவு கூரல்

பிறப்பு:
31-08-1957

இறப்பு:
19-04-2000

ஆண்டவருடைய சமூகத்தில் வாழும்
## திருமதி எலிசபெத் தேவஅரசி போல்
(குஞ்சுப்பிள்ளை, கனடா)

'இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார்.' 1.தெச 4:14

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.* (86718)

பிரிவால் துயருறும்
சகோதரர்கள், உறவினர்கள்.

# நீங்காத நினைவுடன் ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
28
-
10
-
1947



விண்ணில்
19
-
04
-
1996

## அமரர் சீவரத்தினம் சிவசுப்பிரமணியம்
(யாழ்.கட்டடத் திணைக்கள பிரதான பொறியியலாளர் பணிமனை ஊழியர்)

திதி: 25-04-2001

ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்!
உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கும்

*கண்டி வீதி,*
*கைதடி நுணாவில்,*
*சாவகச்சேரி.* (86580)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# மயிலுக்குத் தோகை இருப்பதுபோல் கலைஞனுக்கு ஞானச்செருக்கு அவசியம்

வளரும் இளம் கலைஞர்கள் மத்தியில் எவ்வளவோ நிறைந்த ஆற்றல்கள் உள்ளன. எனினும் எமது மண்ணில் அவர்களுக்கு போதிய பயிற்சிகள், சந்தர்ப்பங்கள் அளிக்கப் படுவதில்லை. இந்த நிலை மாற வேண்டும். காரணம் இந்தக் கலைஞர்களே நாட்டின் எதிர்காலத் தலைவர்கள்.

இளங்கலைஞர்கள் மத்தியில் தெய்வபக்தி, குரு பக்தி, தேசபக்தி, ஒழுக்கம், நேர்மை, அஞ்சாமை என்பன வலுவூன்ற வேண்டும். சேவலுக்கு கொண்டை இருப்பது போலவும் மயிலுக்குத் தோகை இருப்பது போலவும் இளங்கலைஞர்களுக்கு - வளரும் கலைஞர்களுக்கு - "ஞானச் செருக்கு" அழகைக் கொடுக்கும்.

இங்கு ஞானச் செருக்கு என்பது அகந்தையல்ல, ஆணவமல்ல, இறுமாப்பல்ல, தற்பெருமையல்ல. மாறாக அன்பு, பணிவு, இரக்கம் மற்றும் கலை முதிர்ச்சியே சில கலைஞர்கள் ஆணவம், அகந்தை, இறுமாப்பு, குரு நிந்தனை போன்ற தீய குணங்களால் இறைவனால் அருளப்பட்ட கலைத்துவத்தின் பெருமையையே இழந்து விடுகிறார்கள்.

ஆகவே வளரும் இளங்கலைஞர்கள் கத்தி முனையில் நடப்பது போல ஞானச் செருக்கைப் பயன்படுத்த வேண்டும்- அதன்படி வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு கூறுகிறார் உலகறிந்த மேதை, கலையார்வலன் மகா வித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர்.

உலகத் தமிழர் அறிந்த உன்னதக் கலைஞர்களில் கவிமாமணி வீரமணி ஐயாவும் ஒருவர். முத்தமிழ்களான இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று கலைகளும் ஒருங்கே அமை

## அன்பு, பணிவு, கலைமுதிர்ச்சி இவற்றின் வெளிப்பாடே அது

யப் பெற்ற ஒப்புயர்வற்ற கலைஞராகவும் ஆயிரக்கணக்கான இசை நடன ஆசிரியர்களை இந்த மண்ணுக்கு அர்ப்பணித்த பெரும் ஆசானாகவும் இவர் போற்றப்படுகின்றார். *"கற்பகவல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம் மா..."* என்ற பாடலின் மூலம் எண்ணற்ற பக்தி, இசை நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றவர் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள்.

இத்தகைய பெருமைமிக்க மூத்த கலைஞரை - இசை வல்லுநரை 'கலைச்சுடர்' பகுதிக்காக செவ்வி கண்டோம்.

"ராசா வாரும்" என அழைத்த அவரது அன்புக் குரல் எனக்குப் புதிய உத்வேகத்தை அளித்ததுடன் நல்ல உபசரிப்பையும் வழங்கியது.

மகா வித்துவான் பிரம்மஸ்ரீ வீர




மணிஐயருடனான செவ்வியின் முழு விபரமும் இங்கு தொகுத்து வழங்கப்படுகிறது.

### பிறப்பு

வீரமணி ஐயர் 1931 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் இணுவிலில் பிரம்மஸ்ரீ நடராஜ ஐயருக்கும் - சுந்தராம்பாளுக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இணுவில் இசைக் கலைஞர்களும், இயற்றமிழ் வித்தகர்களும் நெருங்கி வாழும் தெய்வீக மணம் கமழும் பெரும் பதி. அங்குள்ள பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் அருகே அமைந்ததே ஐயரின் பிறப்பிடம் - வாழ்விடம்.

இணுவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்த இவர் இளமையிலேயே பல்துறை விற்பன்னராக விளங்கினார். இதனால் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக (1947 ஆம் ஆண்டு) விளங்கிய வீ.வீரசிங்கம் 'கல்லூரியின் சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய மாணவன்' என்ற பதக்கத்தை இவருக்கு அணிவித்துக் கௌரவித்தார்.

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த ஐயர் அவர்கள் தனது தமையனாரான கந்தசாமி ஐயரின் வழிகாட்டுதலினைத் தொடர்ந்து 22 ஆவது வயதில் கலை வளரும் திருநாடாம் தமிழ்நாடு வரை சென்று கலையைப் பயிலும் வாய்ப்பைப் பெற்றார். உலகப் புகழ் பெற்ற கலாஷேத்திர நடனப் பள்ளியில் இணைந்த ஐயர் அவர்கள் அந்தப்பள்ளியின் தலைவராக நடன மேதை ருக்மணி அருண்டேல் அவர்களிடம் பரதக் கலையைப் பயின்றார். இவரே ஐயர் அவர்களின் 'பரதகலா குரு ஆவார். தொடர்ந்து இசை மேதை எம்.டி.இராமநாதையரிடம் இசைக் கலையைப் பயின்றார். இவரே ஐயர் அவர்களின் சங்கீத கலா குருவாக அமைந்தார். ஐயர் அவர்களிக் சாகித்தியகலா குரு பாபநாசம் சிவன் ஆவார். பாபநாசம் சிவனிடம் தான் நேரடியாகப் பெற்ற அனுபவங்கள், கலை நுணுக்கங்கள்



'இயலிசை வாரிதி' - 'கவிமாமணி',
'ஸாஹித்ய சிரோமணி',
"ஸாஹித்ய ஸாகரம்', 'அருட்கலை வாரிதி',
'முத்தமிழ் வாரிதி', 'ஸ்ருஷ்டிஞாயிறு',
'ஸாஹித்யமாமணி', 'முத்தமிழ் வித்தகர்',
'கலா பூஷணம்'.
யாழ்ப்பாணம்
**பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர்**

இன்றும் தனது மனதில் ஊசலாடுவதாக பிரம்மஸ்ரீ விரமணி ஐயர் தெரிவித்தார்.

> **முத்தமிழும் வல்லோன் முது மறையோன் வீரமணி**
> **அத்திமுக னுக்கூஞ்ச லாதியன் - தித்தித்துத்**
> **தேனொழுகு தீந்தமிழிற் செய்தளித்தான் கீர்த்தனநற்**
> **கானமெழு நாவனிவன் காண்.**
> **-பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை-**

### சாகித்திய கர்த்தா

எச்.எம்.வி. கம்பனியினர் வீரமணி ஐயாவின் பல்துறை ஆற்றல்களையும் வியந்து 'சாகித்திய கர்த்தாவாக' அவரை நியமனம் செய்தனர். இந்த நியமனத்தைத் தொடர்ந்து திருமயிலை கபாலீஸ்வரர் ஆலயம் மீது 'மயிலைக் குறவஞ்சி' பாடப்பட்டது. திருக்குற்றாலக் குறவஞ்சியை ஆராய்ந்து அதைப்போலவே கபாலீஸ்வரப் பெருமானைத் தலைவராகவும், கற்பகாம்பாளைத் தலைவியாகவும் கொண்டு இந்த நூல் இயற்றப்பட்டது.

இசை ஆர்வலன் கொத்தமங்கலம் சுப்பு தலைமையில் நடைபெற்ற இந்த நூலின் வெளியீட்டு விழாவில் வீரமணிஐயர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நூலில் இடம்பெற்ற முதலாவது பாடலான *'கற்பகவல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன்'* என்ற பாடல் விரமணிஐயருக்கு இலங்கை, இந்தியா மற்றும் இசை வல்லுநர்கள் வாழும் சகல இடங்களிலும் அளவில்லாத பெருமையைத் தேடிக் கொடுத்தது.

'மயிலைக் குறவஞ்சி'யின் வெளியீட்டு விழாவில் மாயூரம் டி.ஆர்.விஸ்வநாத் சாஸ்திரி, சங்கீத கலாநிதிகளான முடிகொண்டான் வெங்கட்ராமையர், பேராசிரியர் சாம்பமூர்த்தி, மைசூர் வாசுதேவாச்சாரியார், திருமுருகக் கிருபானந்தவாரியார், வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன், கவியோகி சுத்தானந்த பாரதியார் போன்ற அறிஞர்களும், இசை மேதைகளான எம்.டி.ராமநாதன், பி.இராஜம் ஐயர், ஈ.கிருஷ்ணை ஐயர், ப.ப.சடகேசன், முசுரி சுப்பிரமணியஐயர், ஜி.என்.பால சுப்பிரமணியம், டி.ஆர்.மகாலிங்கம், சூலமங்களம் சகோதரிகள் ஆகியோர் கலந்துகொண்டு வீரமணி ஐயரின் சிறப்புக்களையும், நாட்டிய இசை மாண்பையும் பாராட்டிப் புகழ்ந்து பேசினர்.

மேற்குறிப்பிட்டவர்கள் அனைவரும் உலகறிந்த - கலையுலகறிந்த - பெரும் மகான்கள். இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து வீரமணிஐயரின் திறமைகளைப் புகழ்ந்திருக்கின்றனர் எனின் அது மிகச் சிறப்புடையதே.

திருமயிலைக் குறவஞ்சியின் பெருமையை அறிந்த கபாலீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகத்தினர் ஆலயத்தின் வாசலிலே *'கற்பகவல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன்'* என்ற பாடலை கருங்கல்லிலே பொறிப்பித்ததுடன், அதன் கீழே ஆக்கியோன் யாழ்ப்பாணம் வீரமணிஐயர் எனப் பொறிப்பித்தனர். இன்றும் மேற்படி ஆலயத்துக்குச் செல்லும் பல நாடுகளையும் சேர்ந்த பக்தர்கள் இதனைக் கண்டு யாழ்குடாநாட்டுக் கலைஞன் ஒருவனின் புகழைப் புகழ்ந்து பேசிக்கொள்கின்றனர்.

வீரமணி ஐயரவர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்த சமயம் அவரால் இயற்றப்பட்ட பாடல்களை புகழ்பூத்த இசை விற்பன்னர்களான சீர்காழி கோவிந்தராஜன், டி.எம்.சௌந்தரராஜன், மகாராசபுரம் சந்தானம், டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா, சூலமங்களம் சகோதரிகள், டி.கே. ஜயராமன், சீர்காழி ஜி சிதம்பரம் போன்றவர்களும் திரை இசைக் கலைஞரான மலேசிய வாசுதேவன் போன்றவர்களும் தமது குரலில் இசைமீட்டுப் பாடியிருப்பது ஈழ மணித் திருநாட்டுக்குப் பெருமை தேடித் தந்துள்ளது. எனவே உலகறியத் தமிழை, சைவத்தை எடுத் தியம்பிய ஒருவர் நமது மகாவித்துவான் ந.வீரமணிஐயர் அவர்கள் என்றால் மிகையில்லை.

### கல்விப் பணி

யாழ்.திரும்பிய இயலிசை வாரிதி வீரமணிஐயர் அவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சங்கீத ஆசிரியராகவும் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நாட்டிய ஆசிரியராக வும் விளங்கினார். இவ்விரு கல்லூரிகளிலும் பணியாற்றிய வேளை அவரால் இயற்றப்பட்ட நாட்டிய நாடகங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மாவட்டம், நாடளாவிய ரீதியில் முதலாம் பரிசைப் பெற்றுக்கொடுத்தன.

'நாட்டிய நாடகங்கள்' என்றால் அது வீரமணிஐயரையே சாரும் எனக் கூறக்கூடிய வகையில் இன்றும் இலங்கையின் எந்தப் பாகத்திலும் நடைபெறும் நாட்டிய நாடகங்கள் வீரமணிஐயாவின் படைப்புக்களாகவே விளங்குகின்றன. இதுவரை 350 இற்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் ஐயரால் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் பலவும் இன்றும் அச்சு வாகனம் ஏறாமல் மூலப் பிரதிகளாகவே உள்ளன.

வீரமணிஐயாவின் நாட்டிய நாடகங்களில் தமிழிசை துள்ளி விளையாடும், சைவச் செழுமை, தேசப் பற்று, இன விடுதலை என்பனவும் மேலோங்கியிருக்கும்.

வீரமணிஐயா அவர்கள் பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் ஏறத்தாழ 33 வருடங்கள் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இந்தக் காலத்தில் இவரது பயிற்சிப் பட்டறையில் இருந்து பெரும் தொகையான சங்கீத, நாட்டிய, சித்திர ஆசிரியர்கள் பூரண பயிற்சி பெற்று வெளியேறினர். இவர்களே இன்று இலங்கைத் தீவின் பல்வேறு பகுதிகளிலும் கலையை வளர்க்கும் ஆசிரியர்களாக, போதனாசிரியர்களாக விரிவுரையாளர்களாக உள்ளனர். ஐயரின் தலை மாணாக்கர்களில் ஒருவரான திருமதி சிவசக்தி சிவனேசன் லண்டன் மாநகரில் கலையை வளர்க்கும் வகையில் 'அக்கடமி' ஒன்றை நிறுவி பல்லாயிரக்கணக்கான மாணவர்களை இசை, நடனத் துறையில் ஈடுபடுத்தி வருகின்றார்.

(வளரும்)

**சந்திப்பு: ஆனந்தன்**

> **"தித்திக்கும் தேன் தமிழில் நவரஸமுடன் பக்திரஸமும் ததும்ப, இலக்கணச் சுவை 'குன்றாது மயிலைக் குறவஞ்சி' என்ற சிறிய அரிய நூலிழைத்து கூடுகட்டியிருக்கும் 'அற்புதச் சிலந்தி' நமது ந.வீரமணி என்னும் அடையாறு கலாஷேத்திர மாணவர்"**
> **-பாபநாசம் சிவன்-**



**சர்வதேச குருமார் ஒன்றிய வடமராட்சிக் கிளையும் இசைவேளாளர் சங்க வடமராட்சிக்கிளையும் இணைந்து நல்லூர் நாதஸ்வர வித்துவான் வல்லிபுரம் குமாரசாமி(ராசு)யை கௌரவித்து விழா ஒன்றை அண்மையில் அல்லையம்பதி தேவஸ்தானத்தில் நடத்தியது.**

**இந்த நிகழ்வில் சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர் கலைஞருக்கு 'நாதகீர்த்தனா' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். பிரபல நாதஸ்வரமேதை கலாசூரி என்.கே.பத்மநாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.**

**இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அருளுரை வழங்கினார்.**

**கலைஞர்கள், ரசிகர்கள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையானவர்கள் கலைஞரைக் கௌரவித்து பொன்னாடை போர்த்தி மலர்மாலை சூட்டினர்.**

(க-3)



**செல்லையா மெற்றாஸ்மயில் எழுதிய "மண்வாசனையில் மூன்று நாடகங்கள்" என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது அதன் ஓர் அங்கமாக இடம்பெற்ற "சங்கிலியன்" நாடகத்தில் எடுக்கப்பட்ட படம் இது. முறையே போர்த்துக்கீசத்தளபதியாக கலாவித்தகர் சு.தயாநிதி (ஆசிரியர்), அப்பாமுதலியாக கலாபூசணம் வே.க.பாலசிங்கம், காக்கைவன்னியனாக கலையரசன் மா.சிவரத்தினம், பரநிருபசிங்கனாக காத்தவராயன் புகழ் பொ.அருந்தவநாதன் (ஆசிரியர்), பரராசசிங்கனாக யஸ்ரின் தைரியநாதன் தோன்றும் காட்சி.**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

இந்திராணி தாமோதரம்பிள்ளை என்பவரின 405281147V இலக்கமுடைய கொழும்பு-6 என விலாசமுடைய தே.அ.அட்டையும், 65, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் 0901016891 இலக்க முடைய வி.அ.அட்டையும் இராமநா தன் வீதிப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுததவர்கள் தயவுசெய்து பரமேஸ்வராச்சந்தி, சிவன் ஸ்ரோர்ஸில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும். (86794)

அனலைதீவு 7ஆம் வட்டாரத்தைச சேர்ந்த வேலாயுதம் பேரம்பலம் என்பவரது தே.அ.அட்டை (321570453V), வி.அ.அட்டை (0913010252) இரண்டும் 08-04-2001 அன்று யாழ்ப்பாணம் சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 375, கோயில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (86761)

உரும்பிராய் வடக்கு, கற்பகப் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த திரு ஞானசம்பந்தர் நல்லம்மா என்பவருடைய தே.அ.அட்டை உரும்பிராய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து போதனா வைத்திய சாலை கண்கிளினிக்கில் S.ஆனந்த ராசாவிடம் ஒப்படைத்துதவவும். (86779)

பெரியமணல், காரைநகர் என்னும் முகவரியைச் சேர்ந்த கோபாலன் ஹரிகரசுதன் என்பவரது விசேட அ.அட்டை (091306464), 13-04-2001 அன்று திருநெல்வேலியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரிக்கு அல்லது **S.**இராஜலிங்கம் கேணியடி வைரவர் கோயிலடி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (86789)

சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரி - தவராசா (ஆசிரியை-சாவகச்சேரி மகளிர் கல்லூரி) என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.666440706V), விசேட அ.அட்டை (இல.091003072) என்பன 13-04-2001 அன்று சுன்னாகம் பிரதான சந்திக்கும் பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்: கே.கே.எஸ். வீதி, ராஜ்வேல்ஸ் புடைவை ஸ்தாபனத்தில் ஒப்படைத்து உதவவும். (86790)

## விற்பனைக்கு

SONY 20" K.V1902 3 SYSTEM T.V. விற்பனைக்கு உண்டு. (ORIGINAL JAPPAN) N.T.RAJAN, 140, K.K.S. வீதி (சத்திரத்துச் சந்தி முன்பாக), யாழ்ப்பாணம். (86795)

VORTEE DIGITAL / ANALOG, BUILT- IN, POSITIONER, 5000 CHANNELS MODEL NO: VS 9700 DAP + RECIEVER, 10 அடி டிஸ்க், LNBF EROSTAR டிஸ்க் 6 அடி (U.S.A.) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 2863 (86799)

பெயின்ரிங் எயர் கொம்பிரஸர் உடன் விற்பனைக்கு உண்டு. (ஆஸ்திரேலியத் தயாரிப்பு) தொடர்பு: இல.6, 4 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (காலை 11.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் இடையில் மட்டும்) (86777)

நல்ல நிலையிலுள்ள ரேடியோ லைன் (**RL**) தொலைபேசிகள் இரண்டு விற்பனைக்குண்டு தொடர்பு: ஐ. மகேந்திரம், ஊரெழு கிழக்கு, ஊரெழு. (86709)

## கமெரா விற்பனைக்கு

மினோல்டா கமெரா விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.185/5, கில்னர் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (86781)

## அபூர்வ ஜோதிடம்

வடநாட்டு சித்தர் மருத்துவ முறையில் தீராத நோய்க்கு அற்புத சிகிச்சை, நினைத்த காரியம் நடக்குமா? என காண்ட முறையில் பலன் அறிதல். இவ்வாரம் மட்டும் தினமும் 8.30 - 5.00 **p.m.** தொடர்பு: ஆடியபாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (86792)

## தவறிவிட்டது

நுணாவில் மேற்கு, நுணாவிலைச் சேர்ந்த செல்வி ரேவதி குலசேகரம் என்பவரின் விசேட அ.அட்டை (இல. 091049863)சீரணிச் சந்திச் சுற்றாடலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: சண்டிலிப்பாய், ஆலங்குளாய் வீதி, திருத்தணி தொலைத்தொடர்பகத்தில் ஒப்படைத்துதவவும்.(T.P.No. 070-21-2897) (86798)

## மணமகள் தேவை

றோமன் கத்தோலிக்க, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969 இல் பிறந்த, கனடாவில் பிரஜாவுரிமை உடைய, Computer Micro Software Network பொறியியலாளருக்கு டாக்டர் அல்லது பொறியியலாளர் மணப் பெண்ணைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (இந்து சமயத்தவரும் விரும்பத்தக்கது) விள. இல. 1264, மே/பா உதயன். (86796)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த **B.A.** பட்டதாரியான, தற்பொழுது அரசாங்க உத்தியோகம் பார்க்கும் கேட்டை நட்சத்திரம், செவ்வாய் 8 கிரக பாவம் 64 உள்ள, வயது 26 மணமகளுக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ மணமகன் தேவை. தொடர்பு: முருகன் திருமணசேவை, செ.விஜயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய் (ஆனைக்கோட்டை, மூத்த விநாயகர் கோயிலடி). (86775)

## புறொயிலர் குஞ்சுகள்

பிறிமா, சமிரா இன புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. ஒரு நாள் வயது. ரூபா 55/= மட்டுமே. (24-04-2001) பிறிமா இன வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் 60/= விலையில் விநியோகிக்கப்படும். தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி அல்லது கிளின் சொட் பின்புறம், யாழ். பஸ் நிலையம், வடமராட்சியில் சுபகணநாதன் பண்ணை, மாலி சந்தி, அல்வாய். (86797)

## கடாக்குட்டிகள் விற்பனைக்கு

வளர்ப்புக்கு உகந்த நல்ல இன இரண்டு கடா ஆட்டுக் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (86810)

## கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள, உத்தியோகத்தர்களுக்கு ஏற்ற, மொறிஸ் மைனர் 1000 கார் ஒன்று விற்பனைக்கு உண்டு. தினமும் 4.30 மணிக்குப் பின் பார்வையிடலாம். தொடர்பு: 10/14, சிவன் கோயில் வீதி, தெற்கு ஒழுங்கை, திருநெல்வேலி. (86784)

# கண்ணீர் அஞ்சலி



பிரான்ஸ் குமார் சொப் (**France Kumar Shop**) நிறுவனத்தாரின் தந்தையார்

அமரர்

## செல்லத்துரை தவவிநாயகம் (J.P.)

(அல்லைப்பிட்டி முன்னாள் கிராமத் தலைமைக்காரர் - முன்னாள் கிராம சங்கத் தலைவர்)

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு - பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ச.புவிச்சந்திரன்**
**வினோ நகைப் பூங்கா,**
**185, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P. - 021 - 2824**

(C/16354)

# ஓவியச் செல்வனின் ஓராண்டு கண்ணீர்ப் பூக்கள்



தோற்றம் 01 - 12 - 1964

மறைவு 30 - 04 - 2000

## கந்தையா குணசேகரம்

(குணம் ஆட்ஸ் உரிமையாளர்)
திதி: 19.04.2001

ஓவியத்துள் ஒளி ஊட்டி
மக்களின் மனங்களில் மகிழ்வூட்டிய
மாமேதை குணசேகரா - இன்று
மக்களின் மனங்களைக்
கலங்கவிட்டு மறைந்தாயோ?
இல்லை.........
தூரிகை கொண்டு
ஒளியூட்டிய ஓவியங்களுக்குள்
ஒருவனாய் நின்று
சிரிக்கின்றாய்!
ஓவியச் செல்வா குணசேகரா!

இன்று (19.04.2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பெற்றோர்,
சகோதர சகோதரிகள்.

கோப்பாய் வடக்கு.

(86783)

எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின் சுதந்திர உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளனின்

# ஆறாம் மாத நினைவலைகள்



பிறப்பு 05 - 06 - 1961

அழிப்பு 19 - 10 - 2000

## மயில்வாகனம் நிமலராஜன்

நிமல்!

உன் மரணம்
உலகின் நரம்புகளை அதிரவைத்தது!
வானலைகள் சோகம் இசைத்தன!
உன் குருதி உறைந்த
இம்மண்ணில் இருந்து நாளை நீ உயிர்ப்பாய்!
அன்று......!
தாழ்ந்த புருவங்கள் நிமிரும்!
கவிழ்ந்த இமைகள் உயரும்!!
இறுகிய உதடுகள் பேசும்!!!
தெய்வம் சாட்சி சொல்லும்.

- குடும்பத்தினர்.

(C/16340)

(அன்னாரின் ஆத்ம சாந்தித் திருப்பலி யாழ்.போதனா வைத்தியசாலை அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இன்று (19.04.2001) நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.)

# நோர்வே மத்தியஸ்த முயற்சியை கைநழுவ விட்டு விடாதீர்கள்!

## இந்துமத குருமார் ஒன்றியம் வலியுறுத்து

தற்பொழுது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுக் காலதாமதமின்றி இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நோர்வே நாட்டின் மத்தியஸ்த முயற்சியுடன் இருதரப்பினரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் இந்தச் சந்தர்ப்பத்தைக்கைநழுவ விட்டுவிடாதீர்கள்!

இவ்வாறு சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளது.

மக்கள் சுயமரியாதையுடன் சுபீட்சமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்வதற்கு வழி செய்து தருமாறு இருதரப்பினரையும் கேட்டுக் கொள்வதுடன் சமாதானமும் சுபீட்சமும் நிலவிடவும் ஆசி கூறியுள்ளது. (க-10)

# பிரபாகரன் மீது...

(3 ஆம் பக்கத் தொடர்)

தமது பேச்சில் பிரபாகரனை குறிப்பிடும் போது 'தேசியத் தலைவர்' என்றே அவர்கள் குறிப்பிடுகின்றனர். கண்டிப்பான ஆசிரியராக பிரபாகரன் உணரப்படுகிறார்.

விடுதலைப் புலிகள் மது அருந்துவதில்லை, சிகரெட் புகைப்பதில்லை. அனுமதி கிடைக்கும்வரை அவர்கள் திருமணம் செய்வதுமில்லை. பெண் போராளி 24 வயதிலும், ஆண் போராளி 28 வயதிலும் திருமணத்துக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

### கழுத்தில் 'சயனைட்' குப்பி!

விடுதலைப் புலிகள் ஊதியம் பெறுவதில்லை. அரசியல் பிரிவு உட்பட அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த விடுதலைப்புலிகளின் கழுத்துகளிலும் 'சயனைட்' குப்பி கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டு, சித்திரவதைக் குள்ளாகி இரகசியங்களை வெளியிடுவதிலும் பார்க்கஇறப்பதற்கு அவர்கள் தயாராக உள்ளனர்;

இது சித்தப் பிரமையால் நிகழ்வதல்ல.

1970கள் வரை தமிழ் அமைப்புகள் அஹிம்சையையே கடைப்பிடித்து வந்தன. ஆனால் 1983 இல் சிங்களக் காடையர்கள் தமிழர்களுக்கு எதிராகத் திரும்பி படுகொலை செய்து, வடக்குக்கு அகதிகளாக அனுப்பிய போது விடுதலைப் புலிகள் இயக்கம் வளர்ந்தது. பிரபாகரனின் வழிகாட்டலின் படி தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

### கரும்புலிகள் உருவாகினர்

விடுதலைப் புலிகளின் தீவிரத் தன்மை, தற்கொலைத் தாக்குதல் பிரிவான கரும்புலிகள் உருவாக வழிவகுத்தது.

பொதுமக்களுடன் புலிகள் கலந்திருப்பதாக அரசே கூறுறது. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அவர்களுக்கு உள்ள செல்வாக்கு இதற்குச் சாட்சி.

''புலிகள் இல்லாவிட்டால் தமிழ் மக்கள் கூட்டுக் கொல்லப்பட்டிருப்பார்கள்'' என்று கூறுகிறார் பங்கு மதகுருவான வண. பிதா சேவியர்.

மேலும் அவர் கூறுகையில் —

''எனது பங்கில் உள்ள மக்கள் யுத்தம் முடிவடைய விரும்புகிறார்கள் ஆனால், உயிர்களையும், உடைமைகளையும் சொந்த இடங்களையும் இழந்த மக்கள், தமது உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் தீர்வு வேண்டுமென்றே கோருகிறார்கள். மீண்டும் இதே போல் நிகழ இடம்கொடுக்க மாட்டோம் என்று அவர்கள் கூறுகிறார்கள்'' என்று வண. பிதா சேவியர் தெரிவித்தார்.

தமிழர்களின் இதயங்களையும், மனங்களையும் அரசு இடர்ப்படுத்திவிட்டது.

### நெருக்கள் படுமோசம்

2 ஆயிரம் சதுர மைல்கள் கொண்ட வன்னிப் பகுதியில் தொலைபேசி வசதியோ, மின்சாரமோ கிடையாது. அங்குள்ள தெருக்கள் படுமோசமான நிலையில் காணப்படுகின்றன. எரிபொருள் இன்மையால் பெரும்பாலானவர்கள் சைக்கிள்களிலேயே பயணிக்கிறார்கள்.

சுமார் 6 லட்சம் மக்கள் மனிதாபிமான உதவிகள் கூட கிட்டாத நிலையில் வன்னியில் உள்ளனர்.

அவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் உள்ளூரிலேயே அகதிகளாக வாழ்கிறார்கள். பெரும்பாலானவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே உள்ளார்கள். சர்வதேச உதவி நிறுவனங்கள் உணவு வகைகளை வன்னியில் விநியோகிக்க அரசு தடைவிதித்துள்ளது. 40 சதவீதமான சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### 6 தடவைகள் இடப்பெயர்வு

ஐந்து வருடங்களுக்கு முன்னர் இராணுவம் யாழ்ப்பாணத்தைப் பிடித்தபோது, தனது 6 பிள்ளைகளுடன் வன்னிக்கு இடம்பெயர்ந்தவர் 52 வயது ஆசிரியையான புஷ்பராணி. இவரது ஒரு மகன் மோதலில் உயிரிழந்தார். ஒரு மகள் கடற்புலியாகி உள்ளார். புஷ்பராணி இதுவரை 6 தடவைகள் இடம்பெயர்ந்ததாகக் கூறுகிறார்.

இத்தகைய குடும்பங்களில் இருந்தே விடுதலைப் புலிகளுக்கு அதிகமான உறுப்பினர்கள் சேருகிறார்கள்;

பாடசாலைகள் குண்டுத்தாக்குதல்களால் சிதைந்துபோய்க் காணப்படுகின்றன. வகுப்புகள் சேதமடைந்த கூரைகளுக்குக் கீழ் நடைபெறுகின்றன.

மருத்துவ மனைகளில் மருந்துப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

### நோயாளி தற்கொலை

''என்னிடம் சிகிச்சை பெற்று வந்த நோயாளி கடந்தவாரம் கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு காட்டுக்குள் சென்று விட்டார், அந்தக் கடிதத்தில் ''நோயால் நான் வேதனைப் படுகிறேன்; ஆகவே தற்கொலை செய்யப்போகிறேன்'' என்று அவர் எழுதியிருந்தார்.

—இவ்வாறு ஒரு மருத்துவர் வேதனையுடன்தெரிவித்தார்.

நோயாளிகளுக்கு மருந்து கொடுக்க முடியாத கையாலாகாத நிலையில் தானிருப்பதாக அந்த மருந்துவர் மேலும் குறிப்பிட்டார்.

நத்தாரையொட்டி விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்து அதனை ஒவ்வொரு மாதமும் நீடித்து வருகின்றனர். ஏப்ரல் 24 ஆம் திகதி வரை யுத்த நிறுத்தத்துக்கான காலக்கேடு உள்ளது.

நோர்வே அனுசரணையாளர்களுக்கு அவகாசம் வழங்குவதற்காக யுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் மேலும் நீடிக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

கடந்த இரண்டு வாரகாலமாக தமிழ்ப்பகுதியில் இருந்து விட்டு மாலையில் தெற்குப் பகுதியை நோக்கிப் புறப்படுகிறேன்.

ஒரு நாள் நடைப்பயணத்திற்கு அப்பால் இராணுவ எல்லை உள்ளது! இரவின் இருள் போர்வையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு சென்று விடுவதாக விடுதலைப் புலிப் போராளிகள் உறுதியளித்துள்ளார்கள். ★

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 19

ஏழாலையம்பதி தம்பு வித்தை ஞான வைரவர் ஆலயத்தில் அண்மையில் வசந்த மண்டபம் திறந்து வைக்கப்பட்டதையொட்டி நாளை வெள்ளிக்கிழமை சண்முக வடிவேல் தலைமையில் திருமுறை ஓதல் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மதியம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்; (க-4)

★ ★ ★

வண்ணார்பண்ணை, காட்டுத்துறை பகவதி மாரியம்மாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று வியாழக்கிழமை பகல் அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் நடைபெற்று மாலை சிங்க வாகனத்தில் அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (க-10)

★ ★ ★

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கொண்டாடப்படும்.

'வாகீசர் வாக்கு' என்னும் தலைப்பில் உபந்நியாசமும் அங்கு இடம்பெறும். (க)

# இளைஞன் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இளைஞர் ஒருவர் யாழ் நீதிவான் இ. த. விக்னராஜாவினால் விடுவிக்கப்பட்டுள்வார்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த கந்தசாமி விமலசேனாதிராசா என்பவரே இவ்வாறு விடுவிக்கப் பட்டவராவார். (ம-5)

# இளைஞர் சேவை அதிகாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப், 19

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர் சேவை அதிகாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்றும்நாளையும் யாழ்ப்பாணத்திலுள்ள மன்றத்தின் மாவட்ட அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளன.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் உரியவர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 119 விண்ணப்பதாரிகள் இந்த நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர். (ம-5)

# மிதிவெடியில் சிக்கி இடது காலில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 19

தென்மராட்சிப் பகுதிக்கு வீடு பார்க்கச்சென்ற இளைஞன் மிதிவெடியில் சிக்குண்டு தனது இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்த சம்பவம் சரசாலையில் இடம்பெற்றது.

மீசாலையில் இருந்து இடம்பெயர்ந்து வதிரியில் வசித்து வரும் கதிரேசு உதயன் (வயது 17) என்பவரே படுகாயமடைந்தவராவார். வீடு பார்க்கச் சென்றவேளை சரசாலைப் பகுதியில் மிதிவெடியில் சிக்குண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-15)

# பாரதிநேசனின் மறைவுக்கு பத்திரிகையாளர் சங்கம் அஞ்சலி

யாழ் குடாநாட்டின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரும் பிரபல எழுத்தாளரும் கலை இலக்கிய வாதியும் சமதர்ம வாதியுமான வீ. சின்னத்தம்பியின் திடீர் மறைவு குறித்து வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பத்திரிகையாளர் சங்கம் அஞ்சலிச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

சாதாரண குடும்பத்தில் பிறந்து கல்வி கற்கும் போதே சமதர்மக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கம் வகித்து அக்கட்சி உடைந்த போதிலும் இறுதிவரை தன்வாழ் நாளில் சதமர்மக் கொள்கைகளைப் பின்பற்றியதுடன் சொந்த வாழ்க்கையிலும் பிறழாது கடைப்பிடித்து வந்தார். தேசாபிமானி, யுவசக்தி, தொழிலாளி ஆகிய கம்யூனிசப் பத்திரிகைகளின் ஆசிரியராகவும் மக்கள் இலக்கியம் போன்ற கலை இலக்கிய இதழின் ஆசிரியராகவும் இருந்து வந்துள்ளார்.

பீக்கிங் வானொலியில் 16 வருடங்கள் மொழிபெயர்ப்பாளர் ஒலிபரப்பாளர் செய்தி ஆசிரியராக இவர் பணியாற்றிய காலத்தில் பீக்கிங் வானொலியின் தமிழ் ஒலிபரப்பு உலகெலாம் வாழும் தமிழ் மக்களிடையே மிகப் பிரபலம் பெற்றுத் திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

இலங்கையிலும் பல பத்திரிகை நிறுவனங்களில் சேவையாளனாகவும் பத்திரிகை எழுத்தாளனாகவும் இறக்கும் வரை பணிபுரிந்துள்ளார்.

மிக அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பல்வேறு துறைசார்ந்த விவகாரங்களைக் கொண்ட யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைவரத்தை பாரதிநேசன் என்ற புனைபெயரில் யதார்த்தமாக எழுதி வந்தார்.

யதார்த்தத்துடன் சாதாரண மக்களின் குரலாக பிரதிபலித்து வந்த அமரர் சின்னத்தம்பியின் மறைவு பத்திரிகை, கலை இலக்கிய உலகுக்கு பேரிழப்பாகும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

# புதிய பிரதி அமைச்சர்கள் ஐவர் 23 ஆம் திகதி பதவி ஏற்பர்

பிரதிஅமைச்சர்களாக ஐந்து பேர் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். இவர்கள் 23 ஆம் திகதி பிரதமர் ரத்னசிறிவிக்கிரமநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்பர்.

முஸ்லிம் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட எம்.பியான யூ. எல். எம். மொஹிதீன், இ.தொ.காவின் நுவரெலியா மாவட்ட எம். பியான முத்து சிவலிங்கம், பதுளை மாவட்ட பொ. ஐ. மு. எம். பியான டிலான் பெரேரா மற்றும் அதுல நிமலசிறி ஜயசிங்க, கொழும்பு மாவட்ட எம். பி. பந்துல குணவர்தன ஆகியோரே புதிய பிரதி அமைச்சர்களாக பதவியேற்கவிருக்கின்றனர்;

இவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பதவி விவரங்கள் வார முடிவில் அறிவிக்கப்படும்.

வரவு — செலவுத் திட்ட வாக்களிப்புக்கு முன்னர் இ. தொ. கா., மு.கா. ஆகிய கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாக அக்கட்சிகளுக்கு தலா ஒரு பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை மேலும் 5 பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்படவிருப்பதை ஐ. தே. கவின் தலைமைப் பீடம் கண்டித்துள்ளது

# செயல் இழந்துள்ள கைத்தொழில் நிறுவனங்களின் விவரம் திரட்டு

யாழ். மாவட்டத்தில் கடந்த கால வன் செயல்கள் காரணமாக செயல் இழந்துள்ள கைத்தொழில் முயற்சிகள் மற்றும் கைத்தொழில் நிறுவனங்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை கைத்தொழில் திணைக்களம் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

1991 ஆம் ஆண்டு முதல் செயல் இழந்துள்ள புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் பற்றிய விவரங்களே இவ்வாறு சேகரிக்கப்படவுள்ளன. இது தொடர்பான பணிகளில் யாழ். மாவட்டக் கிராம அலுவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டது. (ம-7-86)




## சுதந்திரத்தைஉறுதிசெய்ய தியாகியாகினாய்!

மழலைகள் களமாடக் கண்டு மகிழ்ந்த அன்னை — நீ
மனம் பொங்கி தாய் மண்ணை மீட்டிட எண்ணி
உணவை ஒறுத்து வலினை உருக்கி
தன்னுயிர் விதைத்தாய் தமிழினம் சிறக்க
மீன்பாடும் தேனாட்டில் தாயே — நீ
உடல்வாடி உண்ணாநோன்பிருந்தாயே
தவித்து நின்ற தமிழர்களைக் காக்க எண்ணினாய்...
சுயநலத்தின் வேரறுத்து பற்றை நீக்கினாய் — எங்கள்
சுதந்திரத்தை உறுதி செய்யத் தியாகி ஆகினாய்!

— பரமரன்

## அன்னைபூபதித்தாயை வணங்குவோம்!

உண்ணா நோன்பிருந்தே அன்னை
உலகத்தின் கண்களைத் திறந்தனள்
பெண்ணினத்தின் பெருமையை அன்னை
பேருலகில் பரப்பியே மகிழ்ந்தனள்
கண்போன்ற உரிமைக்காய் அன்னை
காலத்தால் காவல்செய்து வென்றனள்
மண்ணின் புகழ் காத்த அன்னையை
மாண்புடன் எண்ணி வணங்குவோம்!

மதுரகவி காரை, எம். பி. அருளானந்தன்.

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சின்னத்தம்பி புனிதவதியின் மகன்

## அமரர் சோமசுந்தரம்

(செட்டியார் - பிரபல வர்த்தகர்)

அன்னை மடியினில் 06–05–1940 | ஈஸ்வரன் அருகினில் 23–04–1998

திதி: 20-04-2001 (வெள்ளிக்கிழமை)

வையத்துள் வாழ்வாங்கு நாம் வாழ
வழி சமைத்தவரே!
அன்பும் பண்பும் வளமும் எமக்களித்து
மெழுகாய் உருகினீரே!
உங்களை நாம் பிரிந்து ஆண்டுகள்
மூன்று சென்றிடினும்
உங்களது ஆசை முகம் காண
ஏங்குகிறோம் தினந்தோறும்
கனவில் மட்டுமன்றி நனவிலும் தொடரும்
உங்கள் நினைவு
அலையாத நினைவுகளுடன் தலங்கள் பல
செல்கின்றேன்?

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பு மனைவி: மனோரஞ்சிதம்
குடும்பத்தினர்.

திருமதி ம. சோமசுந்தரம்
அ.மி.பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(86730)

## படகுச் சேவைகள் அதிகரிப்பு

ஊர்காவற்றுறை, ஏப். 19

பயணிகள் வசதி கருதி எழுவைதீவுக்கும் - ஊர்காவற்றுறைக்கும் இடையிலான படகுச் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அனலைதீவில் இருந்து காலை 8.00 மணிக்குப் புறப்படும் படகுகள், வழமையாக எழுவைதீவுக்குச் சென்றே மீண்டும் ஊர்காவற்றுறை நோக்கிச் செல்வதுண்டு. ஆனால் அண்மைக் காலமாக அதிக எண்ணிக்கையான பயணிகள் காணப்படுவதால் படகுகள் ஊர்காவற்றுறைக்கே சென்றுவிடுகின்றன.

இதனை அடுத்தே எழுவைதீவுக்கும், ஊர்காவற்றுறைக்கும் இடையிலான படகுச் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (க-16)

## அப்பர் சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், ஏப். 19

நல்லூர் ஸ்ரீ சட்டநாத சுவாமி தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை காலை 7 மணியளவில் ஆலய பூசையைத் தொடர்ந்து அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நல்லூர் முத்திரைச்சந்தி, கச்சேரி நல்லூர் வீதி மன்ற செயற்பாட்டு அலுவலகமான ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் காலை 10 மணிமுதல் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு பூசையும் சுவாமிகளின் அருட்தொண்டு பற்றிய சொற்பொழிவும் தேவாரப் பண்ணிசையும் இடம்பெறும். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 18

புங்குடுதீவு பாணாவிடை சிவன் கோயிலில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையும், மகேஸ்வர பூசையும் நடைபெற்று பகல் 1 மணிக்கு அன்னதான வைபவமும் இடம்பெறும். (க)

## கசிப்பு விற்பனை அமோகம்

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் கசிப்பு விற்பனை அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

அதிகமான வீடுகளில் மிகவும் இரகசியமாக கசிப்பு விற்பனை செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

95 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் இப்பகுதிகளில் கசிப்பு விற்பனை மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-72)

## அறிவித்தல்

### மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

கல்லூரி இரண்டாம் தவணைக்காக நாளை (20 4 2001) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும். 768, 782, 764, இலக்க பஸ்கள் வழமைபோல் சேவையில் ஈடுபடும் என்பதை அறியத் தருகிறோம்.

பொ. சுந்தரலிங்கம்.
அதிபர்.

(86826)

யாழ். மாவட்ட
## அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
வரையுள்ளது
கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

### வழங்குநர்களைப் பதிவு செய்தல்

எமது சங்கத்திற்கு வேண்டிய மூலப்பொருள்களான தவிடு, பிண்ணாக்கு, சோளன், மீன்தூள், கழிவு அரிசி, கழிவு பருப்பு வகைகள் என்பனவற்றையும் மற்றும் காகிதாதிகள், உபகரணங்களையும் வழங்கக் கூடியவர்கள் எமது சங்கத்தில் பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பதிவு செய்பவர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை 50 ரூபா செலுத்திப் பெற்று இவ்விண்ணப்பத்திலேயே பூர்த்தி செய்து 5-5-2001 ஆம் திகதி மாலை 4.00 மணிக்குப் பிந்தாது மேற்கண்ட முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ, நேரடியாகவோ ஒப்படைக்கலாம். பிந்திய விண்ணப்பங்களும், குறித்த படிவத்தில் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

சகல கூட்டுறவு நிறுவனங்களையும் இக்கோரிக்கையில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(சி/16363) பொது முகாமையாளர்

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் இராசரத்தினம் நேசரத்தினம் [பபி]

மலர்வு 1959-11-24 | மறைவு 2001-03-07

பண்பிலே தெய்வமாய்
பாசத்தின் திருவுருவாய்
வாழ்ந்த தெய்வமே! — உம்
பச்சிளம் பாலகர் ''அப்பா''
என்று பாசமாய் அழைக்கத் துடிக்க
பொறாமை கொண்ட காலனவன் — உனை
அழைப்பதற்காக ஊர்தி வடிவினிலே
உருவெடுத்தான்! ஆனால் பரிதவிக்கும்
உம் துணைவி ஆதரவின்றித் தவிக்க
உன் உடன் பிறந்தோரும் தாயுமே துயரத்தில்
ஆழ்ந்திருக்க
எம் உயிரே! எம்மை விட்டுக் கணப் பொழுதில்
மறைந்ததேனோ?

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாளை (20--04--2001) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
தாய், மனைவி,
மக்கள், சகோதரர்கள்.

உடுப்பிட்டி வீதி,
தொண்டமானாறு.

[86808]

யாழ். மாவட்ட
## அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

எமது சங்கத்தின் தரமான பால் உற்பத்திப் பொருள்களின் விலை விவரம் பின்வருமாறு:

| பொருள் | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| யோக்கட் | 8.50 | 10/- |
| பட்டர் 80 கிராம் கப் | 23.50 | 25/- |
| பட்டர் 250 '' '' | 73.00 | 78/- |
| பட்டர் 400 '' '' | 115.00 | 125/- |
| பட்டர் 500 '' '' | 140.00 | 150/- |
| ஐஸ்கிறீம் 80 '' '' | 12.50 | 15/- |
| ஐஸ்கிறீம் 250 '' '' | 30.00 | 35/- |
| ஐஸ்கிறீம் சொரி 1 கிலோ | 110.00 | 120/- |
| மில்க்லொலி | 3.50 | 4/- |
| கப் தயிர் 250 மி.லீ | 12.50 | 15/- |
| நெய் 750 மி.லீ போத்தல் | 270.00 | 295/- |
| நெய் 375 '' '' | 132.50 | 147/50 |
| நெய் 187 '' '' | 72.50 | 75/- |
| நெய் 30 '' '' | 17.50 | 20/- |
| சர்பத் 1 லீற்றர் | 30.00 | 40/- |
| சர்பத் 1 கிளாஸ் | — | 10/- |
| கோண் ஐஸ்கிறீம் | — | 10/- |

இவற்றை குறித்த மொத்த விலையிலும், சில்லறை விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விசேட வைபவங்களுக்கு முன்கூட்டியே தொடர்பு கொண்டால் தங்களது கடை வாசலுக்கோ, வீட்டு வாசலிலோ நேரடி விநியோகம் மேற்கொள்ளப்படும்.

பாவனையாளர்கள் கூட்டுறவு இயக்கத்தை ஆதரிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

''கூட்டுறவே நாட்டுயர்வு''

பொது முகாமையாளர்

(சி/16362)

# திருமலை பிறிமா ஆலையின் விநியோகப் பணிகள் ஸ்தம்பிதம்

திருகோணமலை,ஏப்.19

திருகோணமலை 'பிறிமா' மா ஆலையின் விநியோகச் செயற்பாடுகள் அனைத்தும் நேற்றுப் பிற்பகல் முதல் ஸ்தம்பிதமடைந்துள்ளன என திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

போக்குவரத்துக்கென வழங்கப்படும் விசேட ஊதியத்தை அதிகரிக்கக்கோரி ஆலையின் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தே தொழிற்சாலையின் விநியோகச் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டன.

இதேவேளை-

ஒரு வருடத்துக்குத் தேவையான மா கையிருப்பில் இருப்பதாகவும், மாவுக்குத் தட்டுப்பாடு இல்லை எனவும் உணவு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(ம-7)

# அச்சுவேலி தபால் நிலையத்துக்கு புதிய நிரந்தரக் கட்டடம் அமைப்பு

அச்சுவேலி,ஏப்.19

அச்சுவேலி தபால் நிலையத்துக்கு நிரந்தரமான புதிய கட்டடம் ஒன்று அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு அருகில் நிறுவப்படவுள்ளது.

புதிய கட்டத்தை நிறுவுவதற்கான இடமும் கட்டடத் தொகுதி அமைப்பதற்கான முதற்கட்ட நிதி ஒதுக்கீடும் ஏற்கனவே கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு அருகில் 'அச்சுவேலி கிராமச்சபை' செயற்பட்டு வந்த பிரதேச சபை உப அலுவலகத்துக்குச் சொந்தமான காணியிலேயே புதிய தபால் நிலையம் நிறுவப்படவுள்ளது.

அச்சுவேலி தபால் நிலையம் இது வரை காலமும் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களில் செயற்பட்டு வந்தது. நீண்ட காலமாக சங்கானை வீதியில் செயற்பட்டு வந்த தபால் நிலையம் தற்பொழுது பருத்தித்துறை வீதியில் செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

(ம-11)

# 4 கால்களுடன் அதிசயக் கோழிக்குஞ்சு

அச்சுவேலி,ஏப்.19

நான்கு கால்களுடன் அதிசயக் கோழிக் குஞ்சு ஒன்று அச்சுவேலி கைத்தொழில் பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் பொரித்துள்ளது.

இயல்பான இரண்டு கால்களுடன் மேலதிகமாக இரண்டு கால்கள் இக் குஞ்சுக்கு இருக்கின்றன. கோழிக்குஞ்சு உயிருடன் நடமாடுகின்றது.

கடந்த வாரம் அடைவைக்கும் இயந்திரத்தில் இருந்து குஞ்சுகளை வேறுபடுத்தும் போது பேட்டுக் குஞ்சு ஒன்று இவ்வாறு நான்கு கால்களுடன் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

(ம-11)


# பாராட்டி வாழ்த்துகின்றேன்

**தென்மராட்சி மக்களுக்குப் புத்தாண்டுப் பரிசாக வழங்கப்பட்ட வ.பி.போ.வ. சபையின் கண்டி வீதி ஊடாக கொடிகாமம் வரையான பஸ் சேவையை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு ஒத்துழைத்தது மட்டுமல்லாமல் தென்மராட்சி மக்களின் துயர் துடைக்கும் அரும்பெரும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் E.P.D.P யினருக்கும் குறிப்பாக வ.மே.பி.ச. தலைவர் ந.திரிலோகநாதன் அவர்களுக்கும் இதற்கு இணக்கம் தெரிவித்த 52ஆவது படையணித் தளபதிக்கும் வ.பி.போ.வ.ச. தலைவர் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கும் அதேவேளை மிருசுவில், உசன் மக்களுக்கும் இச் சேவை மூலம் பயன்பெற மிருசுவில் வரைக்கும் இச் சேவையை விஸ்தரிப்பது மட்டுமல்லாமல் தென்மராட்சி மக்களையும் படிப்படியாக மீளக்குடியமர்த்தி இயல்பு நிலையை ஏற்படுத்துமாறும் சம்பந்தப்பட்டவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

**- இ.ஶ்ரீதரஐயர் (மனோஜயா)**
**கொடிகாமம்.**

(86815)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



மண்ணில் 21.09.1922 — விண்ணில் 21-03-2001

## திருமதி செல்லத்துரை கனகம்மா

**எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு ஓடி வந்து எங்கள் துயரில் பங்குகொண்டு ஆதரவும் அனுதாபமும் தெரிவித்த சகல அன்பு நெஞ்சங்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்ட அன்பர்களுக்கும், எமக்குப் பலவகையிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த அனைவருக்கும் இரு கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**எமது இல்லத்தில் நாளை (20-04-2001) வெள்ளிக்கிழமை அதிகாலை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

*"தம்பலடி" பொலிகண்டி.* (86835)

# நகரில் படையினரின் புத்தாண்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.19

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இராணுவத்தினரின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் நேற்று இசை நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிமுதல் இரவு 8 மணி வரை இந்த இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

51ஆவது படையணித் தளபதி காமினி ஜெயசுந்தர தலைமையில் நடைபெற்ற இந்த இசை நிகழ்ச்சியில் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதனும், மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கமும் கலந்து கொண்டனர்.

நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். நிகழ்வில் சிங்கள பாடல்களுக்கு பெண் இராணுவத்தினர் நடனம் ஆடினர்.

மின்தடை காரணமாக இசை நிகழ்ச்சி இடையில் தடைப்பட்டு பின்னர் மீண்டும் தொடர்ந்து நடைபெற்றது.

நிகழ்ச்சியை முன்னிட்டு இராணுவத்தினரின் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. இசை நிகழ்ச்சிக்குச் சென்ற பொதுமக்கள் கடுமையாக சோதனையிடப்பட்ட பின்னரே மைதானத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டனர்.

(ம-6-4)

# தென்மராட்சி இளைஞர் மூவரைக் காணவில்லை

தென்மராட்சி,ஏப்.19

புத்தாண்டு தினத்தன்று காலை ஆலயத்திற்கு செல்வதாகக் கூறிச் சென்ற தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் வீடு திரும்பவில்லை என முறையிடப்பட்டுள்ளது.

வரணி குடமியன் பிரிவைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும், நாவல்காடு பிரிவைச் சேர்ந்த இளைஞர் ஒருவருமே காணாமற் போயுள்ளதாக கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# மீனவருக்கு உபகரணங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் மீன்பிடி உபகரணங்களை கொழும்பில் இருந்து எடுத்து வந்து யாழ்ப்பாணத்திலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு விநியோகித்து வருகிறது.

குறுகிய காலக் கடன் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுவரும் இந்த மீன்பிடி உபகரணங்களில் வலைகள், கயிறுகள், மிதப்புக்கட்டைகள், றெஜிபோம் சீற்றுகள் என்பன அடங்குகின்றன.

28 லட்சம் ரூபா செலவில் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்ட இந்த உபகரணங்கள் கடந்த 14ஆம் திகதியிலிருந்து கடற்றொழிலாளர் சங்க சமாசத்தில் வைத்து விநியோகிக்கப்படுகின்றன எனவும் இவற்றை பெற்றுக்கொள்ள விரும்பும் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் அறிவித்துள்ளார்.

(க-4)

# விற்பனைக்கு

**நல்ல நிலையில் உள்ள றொயட்டா கயஸ் வான் விற்பனைக்குண்டு.**

***தொடர்பு:* T.சுரேஸ்**
28,பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி. (86832)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பட்டப்பின் படிப்புகள் பீடம்**

**ஈராண்டு பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி**
**(பகுதி நேரம் I)**
**பருவம் II விரிவுரைகள்**

மேற்படி கற்கை நெறிக்கான விரிவுரைகள் 2001. 04. 21 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம். (C/16367)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 1964 - 11 - 27 — மறைவு 1998 - 04 - 19

## வல்லிபுரம் ஜெயராசன் (அப்பன்)

**ஆண்டு மூன்று ஆனதோ அகிலம் விட்டு நீர் போய்**
**ஈண்டு உம் நினைவாகவே நித்தம் நாமும் வாழ்கின்றோம்**
**அன்பாய்ப் பண்பாய் வாழ்ந்த உம்மை மறக்க முடியுமோ?**
**உன்பால் கொண்ட அன்பினால் நினைந்து நாளும் தவிக்கிறோம்.**

*உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*காளிகோயிலடி, மல்லாகம்.* (சி16366)

**- குடும்பத்தினர்.**

# துயர் பகிர்கின்றோம்

எமது கழக நண்பரும்,
நீண்டகால அபிமானியும், கழகப் படப்பிடிப்பாளருமான
**திரு.கிருபாகரன** அவர்களின்
அன்புத் துணைவியார்

**திருமதி மேரி திரேசம்மா கிருபாகரன்**

அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருறுகின்றோம். அன்னாரது பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஶ்ரீ முருகப் பெருமானைப் பணிகின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும்,
விளையாட்டுக்கழகமும்.

(86823)

# இதய அஞ்சலி

எமது போஷகரும் அங்கத்தவருமாகிய
**திரு.த.சிவசுப்பிரமணியம்**
(லீலா பேக் ஹவுஸ் உரிமையாளர் - சங்கானை)
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**
**தம்பிப்பிள்ளை தெய்வானை**

அவர்களின் திடீர் மறைவைக் கேள்வியுற்று அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறோம். தாயைப் பிரிந்து தவிக்கும் தனயனுக்கும் மற்றும் குடும்பத்தவர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அங்கத்தவர்களும், நிர்வாகிகளும்
யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்
கூட்டுறவுச் சங்கம்.
*இல. 3, பஸ்ரியன் சந்தி,*
*யாழ்ப்பாணம்.* (C/16371)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகலிங்கம் செல்லம்

**(சுழிபுரம்)**

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் செல்லம் நேற்று (18.04.2001) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (ஓவசியரும்,கிளாக்கரும்) அவர்களின் அன்பு மனைவியும், பத்மாவதி, லீலாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், வடிவேல், செல்வநாதன் (மின்சாரசபை, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், இராஜகுமாரன் (சுவிஸ்), இராஜசுதன், இராஜகுகன் (சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் பிரதேச செயலகம், வலிமேற்கு, சங்கானை) தயாணந்த், ஜதீப் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கச்சி, சிதம்பரப்பிள்ளை (செட்டி வாத்தியார்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.04.2001) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல தகனக் கிரியைகளுக்காகத் திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தருமதாசன் (பெறாமகன்)
வடிவேலு, செல்வநாதன் (மருமக்கள்)

*பறளாய் வீதி, சுழிபுரம்.* (16370)

# பத்திரிகையாளரின் கண் கோண்டாவில்வாசி ஒருவருக்கு

## அடுத்த கண் இன்று இன்னொருவருக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.19

மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான வீ.சின்னத்தம்பியின் கண்களில் ஒன்று சத்திரசிகிச்சை மூலம் கண்தெரியாதிருந்த ஒருவருக்கு பொருத்தப்பட்டது. மற்றைய கண் இன்று இன்னுமொருவருக்கு பொருத்தப்படவுள்ளது.

அவரது விருப்பப்படி நேற்றுமுன தினம் தானம் செய்யப்பட்டிருந்த கண்களே சத்திர சிகிச்சை மூலம் கண்தெரியாதவர்களுக்கு பொருத்தப்படுகின்றன.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் மூளை மலேரியா நோயால் பாதிக்கப்பட்ட சபாரத்தினம் விக்கினேஸ்வரன் (வயது - 38, குமரகோட்டம், கோண்டாவில்) என்பவருக்கு வலது கண் பார்வை பாதிக்கப்பட்டிருந்தது. இவருக்கே பத்திரிகையாளர் வீ.சின்னத்தம்பியின் ஒரு கண் பொருத்தப்பட்டது. கண் சத்திரசிகிச்சை நிபுணர் க.குகதாசன் இந்த சத்திர சிகிச்சையை மேற்கொண்டார்.

மற்றைய கண் இன்று இன்னுமொருவருக்கு சத்திர சிகிச்சை மூலம் பொருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-6-4-10)

## பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான ஐ.தே.க.குழுவினர் அங்கு நோர்வே அரசுப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திவருகிறது. அந்தப் பேச்சுக்களின் போதே ரணில் விக்கிரமசிங்க இந்த நிபந்தனையை வெளியிட்டிருக்கிறார். (ஐ-7)


# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் பண்புக்கும் மதிப்புக்கும் உரியவரான ஆசான்



அமரர்

**கந்தையா பாலசுப்பிரமணியம்**

(ஸ்கூட்டர் பாலாமாஸ்ரர்)

**அவர்கள் 16.04.2001 இல் இறைபதமெய்தியதையிட்டு மிகவும் மனம் வேதனைப்படுகின்றோம். அவரது இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

(86825) - *அன்பு நண்பர்கள்*



# AJAY COMPUTER INSTITUTE

*32, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.* *சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை, மானிப்பாய்.*

**புதிய பிரிவுகள் ஆரம்பம் - 28-04-2001**

| | | |
|---|---|---|
| (A) | Ms WORD<br>Ms EXCEL<br>Ms PAINT<br>Ms POWER POINT | Duration:- 3 Months<br>Fee.:- 1000/= |
| (B) | PRINTING WORKS<br>CARD CREATIONS<br>MS GREETINGS<br>ADOBE PAINT SHOP PRO | Duration:- 4 Months<br>Fee.:- 1500/= |
| (C) | COREL DRAW<br>AUTO CAD<br>DOS<br>WINDOWS | Duration:- 5 Months<br>Fee.:- 2000/= |
| (D) | Ms ACCESS<br>Ms VISUAL BASIC<br>ADOBE PAGE MAKER<br>ADOBE PHOTO SHOP | Duration:- 6 Months<br>Fee.:- 2500/= |

**பரீட்சை - 2001**

எமது நிறுவனத்தில் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்துகொண்ட MS1, MS2, MS 3 பிரிவு மாணவர்களுக்கான DIPLOMA IN MICROSOFT OFFICE இற்கான பரீட்சைகள் 22-04-2001 அன்று நடைபெற உள்ளதால்

☞ இன்றில் (19.04.2001) 3.00p.m. இல் இருந்து 21.04.2001 5.00 p.m. வரை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

☞ தாங்கள் விரிவுரைகளுக்கு வருகை தந்த நேர ஒழுங்குகளின் படி மீட்டல் வகுப்புகளுக்கு சமுகம் கொடுக்கவும்.

**PRINTING WORKS**

- Photo Quality Colour Printing
- Stencil Cutting And Roneo
- Book Creation
- Scanning Works

என்பன குறைந்த செலவில், குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். (86804)


## துப்பாக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலிகிறாப்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை -

கொழும்பில் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வரும் செய்தியாளர் மேரி கத்தரினை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் சென்று பார்வையிட்டார்.

மேலதிக சத்திரசிகிச்சைக்காக கத்தரின் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட இருப்பதாக அமெரிக்க தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## பொதுமக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும், கொழும்பில் உள்ள குழுவின் தலைமை அலுவலகத்துக்கும் இடையில் செய்திப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செயயப்பட்டுள்ளன.

மரணச் செய்தி, சுகவீனம் மற்றும் பாடசாலை, பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி பற்றிய செய்திகள், நேர்முகப் பரீட்சைகள் பற்றிய செய்திகள் என்பன இந்தச் சேவை மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும் ஹர்சா குணவர்த்தனா மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## யுத்தம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில அமைதியை ஏற்படுத்த முடியாது.

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு அரசு விரும்பினால் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். குடாநாட்டு மக்களின் ஏகோபித்த கோரிக்கை இதுவே.

இவ்வாறு தென்னிலங்கைப் பிரதிநிதிகளிடம் யாழ்.பிரமுகர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

யாழ்ப்பாணம் மக்களின் இந்த எதிர்பார்ப்பை அரசாங்கத்திடம் தெரிவிக்குமாறும் குழுவினரிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## செய்தியாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரத் தடை காரணமாக வன்னி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், குண்டுத் தாக்குதல்களினால் சேதமடைந்த வீடுகள், ஆலயங்கள் ஆகியவற்றையும் மேற்படி பத்திரிகையாளர் நேரில் சென்று பார்வையிட்டார். அவற்றை வெளியுலகுக்கு எடுத்துக் கூறவும் அவர் தயாராகவிருந்தார். எனவே இத்தகைய பெருமைமிக்க பத்திரிகையாளர் விரைவில் குணமடையவும், அவரது பணி தொடரவும் நாம் இறைவனை வேண்டுகின்றோம். - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


தம்பனி

A/L 2001

MR.BALAVASAN

B.B.A(F.M.Spl)

SAT., SUN. => 8-10

ஆரம்பம்: 21-04-01 => SAT.

வீனா கல்வி நிறுவனம்

(86801)


## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதித்தடைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை -

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் அன்னை பூபதியின் நினைவு தினத்தை எழுச்சியுடன் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் -

ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் மற்றும் சிரமதானங்கள் எனப் பல நிகழ்வுகள் இன்று நடைபெற இருப்பதாகவும் - செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் -

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு சுதந்திர மாணவர் முன்னணி துண்டுப்பிரசுரம் மூலம் கேட்டுள்ளது. (ஐ-7-21)

## விசாரணையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் -

எனவே விசாரணைகளை அநுராதபுரம் அல்லது கொழும்பு நீதிமன்றுக்கு மாற்றுமாறும் அவர் தனது மனுவில் கேட்டிருந்தார். மனுவை விசாரித்த மேல்நீதிமன்ற நீதிபதி அதனை நிராகரித்ததுடன் விசாரணைகளை மன்னார் நீதிமன்றமே தொடர்ந்து நடத்தும் என்று தெரிவித்தார்.

இதேவேளை -

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களுக்கு முழுப்பாதுகாப்பு அளிக்குமாறு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (ம)

## விமானத்துக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பரல்களில் எரிபற்று நிலை கூடிய எரிபொருள்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய எரிபொருள்கள் பெரும்பாலும் விமானங்களை இயக்குவதற்கே பயன்படுத்தப்படுகின்றன. எனவே தமது விமானங்களை இயக்குவதற்காகவே புலிகள் அந்த உயர்ரக எரிபொருளை வன்னிக் காட்டுப் பகுதிக்குக் கடத்தி வந்திருக்கக்கூடும் என்று இராணுவ வட்டாரங்கள் சந்தேகிப்பதாக பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் தனியான விமானப் படைப்பிரிவு ஒன்றை அமைத்திருப்பதாக அரச புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே தகவல் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியாவின் பங்களிப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றவாறு ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார் - என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் நேரடிப் பங்களிப்பு என்பது எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது குறித்து அறிக்கையில் விவரிக்கப்படவில்லை.

நோர்வே அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ரணில் விக்கிரமசிங்க அங்கு விஜயம் செய்துள்ளார். இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் நோர்வே ஈடுபட்டிருப்பது குறித்து அந்நாட்டுத் தலைவர்களுடன் அவர் கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை -

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தையைத் தொடக்கிவைக்கும் 'புறோக்கராக' நோர்வே செயற்பட்டு வருவதை இலங்கையின் அயல்நாடாகவும், பிராந்திய வல்லரசாகவும் விளங்கும் இந்தியா விரும்பவில்லை என்று இராஜதந்திரிகளும் பத்திரிகைகளும் தெரிவித்து வந்ததாக 'ரொய்ட்டர்' தனது செய்தி ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை விவகாரத்தில் முன்னர் தலையிட்டு கசப்பான அனுபவங்களை இந்தியா பெற்றிருந்தது. தனது ஆயிரம் படையினரையும் இலங்கை மண்ணில் பலி கொடுத்தது - என்றும் 'ரொய்ட்டர்' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)


*இதோ அரியதொரு சந்தர்ப்பம்! முழுமையாகப் பார்வையிடுவதற்க*

அனேக ரசிகர்களின் அன்பு வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

**கரவை சத்தோலிக்க இளைஞர் மன்றம்**

பெருமையுடன் வழங்கும்

இயேசுவின் வரலாற்றுக் காட்சிகள்

காலம்: இன்று (19-04-2001) வியாழக்கிழமை பி.ப 7.00 மணி

இடம்: கரவை புனித அந்தோனியார் ஆலய முன்றல்

மறையாசிரியர் **இ.ம.ஜெயசீலன்** அவர்களின் நெறியாள்கையில் 50 க்கும் மேற்பட்ட கலைஞர்களின் பங்கேற்பில் வியக்கவைக்கும் 150 அடி நீளமான மேடையமைப்பில் காட்சிப்படுத்தப்படுகிறது.

**பிரவேசம்: இலவசம்**

**காணத்தவறாதீர்கள்!**

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- பங்குத் தந்தையும் கரவை இளைஞர் ஒன்றியமும்.

(86815)

*விளம்பர அன்பளிப்பு:-*

நீக்கொலாஸ் மரியூட் யேசுகுமார், நெல்லியடி - கரவெட்டி.



*வாடிக்கையாளர்களே!!*

**மலிவு விலையில் வெளிநாட்டு சிகரெட்**

சர்வதேச தரம் வாய்ந்த STATE EXPRESS 555

FILTER KING லண்டன் சிகரெட்

மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

*நாடவேண்டிய இடங்கள்:*

**S.V.MURUGESU**

*154, HOSPITAL ROAD,*
*JAFFNA.*
*T.P. 2911*

**CITY AGENCY**

*158,160,STANLEY ROAD,*
*JAFFNA.*
*T.P. 2055*

(86819)

புகைத்தல் உடல் நலத்துக்கு தீங்கானது.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.